விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (23.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## தொடர் குண்டுவெடிப்பை அடுத்து
# அவசரகால சட்டம் மீண்டும் அமுலுக்கு
## ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை



(கொழும்பு) நாட்டில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு தொடக்கம் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி நேற்று நள்ளிரவு வெளியிட்டுள்ளார். (24ம். பக்கம்...)

### யாழ். ஒஸ்மானிய கல்லூரிக்கு அண்மையாக
## சிறப்பு அதிரடிப்படையினரால் வீடு ஒன்று சுற்றிவளைப்பு!
### சந்தேகத்துக்கிடமான இளைஞன் வசித்ததால்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஒஸ்மானிய கல்லூரிக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கு இடமாக வாடகைக்கு குடியிருக்கும் இளைஞர் ஒருவர் தொடர் 24☛

## பலியானவர்கள் எண்ணிக்கை 291 ஆக அதிகரித்துள்ளது

(கொழும்பு)
நாட்டின் 8 இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 291 ஆக அதிகரித்துள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான ருவான் குணசேகர இதனை தெரிவித்துள்ளார். அத்துடன் 500க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தௌஹீத் ஜமாத் அமைப்பே தாக்குதல் நடத்தியுள்ளது!
### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)
இலங்கையில் உள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பே தாக்குதல் நடத்தியது எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, தாக்குதல் நடத்தியவர்கள் 24☛

### பதற்றமான சூழல்
## பாராளுமன்றம் இன்று கூடுகிறது


(கொழும்பு)
நாட்டில் தொடரும் பதற்றமான சூழல் காரணமாக ஒரு மணித்தியால விசேட பாராளுமன்ற அமர்வு இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் இன்று விசேட உரை நிகழ்த்தவுள்ளதுடன் பயங்கரவாத தடுப்பு சட்டமூலத்தையும் அரசாங்கம் சபையில் சமர்ப்பிக்கின்றது. (ம-3)

## கொழும்பு கொச்சிக்கடையில் நேற்று மீண்டும் குண்டுவெடிப்பு

(கொழும்பு)
கொழும்பு, கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றில் குண்டுகள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், அதனை விசேட அதிரடிப்படையினர் வெடிக்க வைத்தனர். இதனால் பதற்றநிலை ஏற்பட்டது.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றினை 24☛



### தாக்குதலை ஆராய
## மூவரடங்கிய குழு நியமனம்

(கொழும்பு)
நாட்டில் உதிர்த்த ஞாயிறு தினமான நேற்று முன்தினம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித்த மல்கொட தலைமையில் மூவரடங்கிய குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24☛

## குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைக்கு உதவுவதாக இன்டர்போல் அறிவிப்பு

(கொழும்பு) இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டு தாக்குதல் குறித்த விசாரணைகளுக்கு உதவ தயாராகவுள்ளதாக இன்டர்போல் அறிவித்துள்ளது. இன்டர்போல் பொதுச்செயலாளர் ஜர்கென் ஸ்டாக் தனது டுவிட்டர் பக்கத்தில் இதனை அறிவித்துள்ளார்.

குறித்த பதிவில், கொடூரமான இந்த தாக்குதல் சம்பவத்தினை வன்மையாக கண்டிக்கின்றோம். தேசிய அளவில் அதிகாரிகள் நடத்தும் விசாரணைக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பினை வழங்குவோம் என பதிவிட்டுள்ளார். (ம-3)

## தேசிய துக்க நாளாக இன்று பிரகடனம்

(கொழும்பு)
இன்றைய தினம் தேசிய துக்க நாளாக கடைப்பிடிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே இன்று துக்கம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

### குண்டுவெடிப்பை ஆராய
## அமெரிக்கா, அவுஸ்திரேலியா புலனாய்வுக் குழுவினர் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)
இலங்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் தொடர்பாக விசாரணைக்கு உதவ அமெரிக்கா, அவுஸ்திரேலியா, அனைத்துலக பொலிஸ் புலனாய்வு நிபுணர்கள் கொழும்புக்கு வந்துள்ளனர்.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான, எவ்பிஐ எனப்படும் சமஷ்டி விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நேற்று 24☛

## ஆயிரம் ரூபாயை எடுத்தால் குண்டு வெடித்திருக்கும்
### கொச்சிக்கடையில் சூட்சுமமான பொறிமுறையில் வெடிகுண்டு

(கொழும்பு)
கொச்சிக்கடை, ஜிந்துப்பிட்டி சந்தியிலுள்ள கொழும்புத் துறைமுக 4ம் இலக்க நுழைவு வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பு வெடிகுண்டு செயலிழக்க செய்யப்பட்டு, வெடிக்க வைக்கப்பட்டது.

இந்த வெடிகுண்டில் நூல் ஒன்று கட்டப்பட்டு அதன் மறு நுனியில், ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் ஒன்று கட்டப்பட்டிருந்தது.

ஆயிரம் ரூபாயுக்கு ஆசைப்பட்டு யாராவது அதனை 24☛

## குண்டுவெடிப்பு தொடர்பில் 55 சந்தேகநபர்கள் இதுவரை கைது

(கொழும்பு)
8 இடங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாத குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய 55 சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பில் 24☛

### 250 கோடி ரூபாய் பெறுமதியான
## கொக்கேயின் போதைபொருள் வடமராட்சி கடலில் மீட்பு
### சந்தேகத்தில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் படகு மூலம் எடுத்துவரப்பட்ட ஏறக்குறைய 250 கோடி பெறுமதியான கொக்கேயின் போதைப்பொருள் நேற்று மதியம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, குறித்த கடற்பரப்பில் நேற்று மதியம் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று வருவதை அவதானித்த கடற்படையினர் 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் ஜனாதிபதி தொலைபேசி உரையாடல்

## இலங்கையின் நிலைமை தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விசேட தொலை பேசி உரையாடலொன்றை மேற்கொண்டார்.

இலங்கை முகம்கொடுத்துள்ள இந்த துன்பியல் நிகழ்வு தொடர்பில் தனிப்பட்ட முறையிலும், இந்திய அரசாங்கத்தின் சார்பிலும் ஜனாதிபதியிடம் தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ள இந்திய பிரதமர், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தேவையான எந்தவொரு உதவியையும் இலங்கைக்கு வழங்க தாம் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கமும் மக்களும் இலங்கையின் சகோதர மக்களுடனும் அரசாங்கத்துடனும் கைகோர்த்திருப்பதாக குறிப்பிட்ட இந்திய பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு தொடர்ந்தும் பலமாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம-3)

# கொழும்பு தபால் ரயில் சேவைகள் அனைத்தும்

## இரத்து செய்யப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து புறப்படவிருந்த தபால் ரயில் சேவைகள் அனைத்தும் நேற்று இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பினை ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் வாகனமொன்றிலிருந்த குண்டொன்று வாகனத்துடன் வெடித்து சிதறியுள்ளது.

இந்நிலையில் வெடிகுண்டு காணப்படுவதாக தெரிவித்து அப்பகுதியிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ம-3)

# சாவகச்சேரி நுணாவிலில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் ஒரு மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் மேற்கு மருதடியைச் சேர்ந்த 46வயதான சி.தேவரத்னம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மரண விசாரணை மற்றும் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

# இது போன்ற கொடூர செயற்பாடுகளுக்கு நாட்டினுள் இனி இடம் கிடையாது

## பேராயருடனான சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

இதுபோன்ற கொடூர செயற்பாடுகளுக்கு நாட்டினுள் இனியும் இடம் கிடையாது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்தார்.

உயிர்த்த ஞாயிறு சமயக் கிரியைகளில் ஈடுபட்டிருந்த போது கிறிஸ்தவ பக்தர்கள் முகம்கொடுக்க நேர்ந்த இந்த துன்பியல் நிகழ்வு குறித்து இதன்போது பேராயரிடம் தனது ஆழ்ந்த கவலைகளை தெரிவித்த ஜனாதிபதி, இந்த நிலைமைகளை கருத்திற் கொண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பேராயருடன் கலந்துரையாடினார்.

எதிர்காலத்தில் நாட்டினுள் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அது தொடர்பில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். பேராயர் உள்ளிட்ட அனைத்து மதகுருமார்கள் மற்றும் தேவாலயங்களுக்கு பாதுகாப்பை கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு திட்டத்தை நடை முறைப்படுத்துமாறு தான் பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3)

# பொலிஸ்மா அதிபர் பூஜித பதவி விலக வேண்டும்

## சுகாதார அமைச்சர் ராஜித



(கொழும்பு)

குண்டு வெடிப்பை தவிர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்காத பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பதவி விலகவேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இல்லையேல் அவரை பதவி விலக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுப்போம் என்றும் அவர் கூறினார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)



## கொழும்பு குண்டுத் தாக்குதலில்

# சுவிஸிலிருந்து இலங்கை வந்த வேலணையைச் சேர்ந்த தம்பதி பலி

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பில் சுவிஸில் இருந்து இலங்கைக்கு வந்திருந்த தமிழ்க் குடும்பமும் சிக்கியுள்ளது.

ஈஸ்டர் விடுமுறைக்காக இலங்கைக்கு வந்து நேற்று மீண்டும் சுவிஸுக்கு திரும்பவிருந்த நிலையில் இலங்கையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் கொழும்பு விடுதியில் வெடித்த குண்டுக்கு தாயும் தந்தையும் இரையாகியுள்ளனர்.

இவர்களின் 3 பிள்ளைகளில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த வெடிப்புச் சம்பவத்தில், சுவிஸ் பேர்ண் பகுதியில் வசித்த வேலணையைச் சேர்ந்த தம்பதிகளான விக்னேஸ்வரநாதன் கேதாரகௌரி ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ம-3)


## தவறிவிட்டது

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் தீர்த்தோற்சவத்தன்று காலை ஊறணி தீர்த்தக் கரையில் பாலசுந்தரம் பாலேந்திரம் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் திறப்பு மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 984 5854, 077 188 1578** (8555)

## பெயர் மாற்றம்

கோவில் வீதி, மல்லாகம் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் லக்ஸன் ஆகிய எனது பெயரை சுப்பிரமணியம் ரவிராஜ் என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
சுப்பிரமணியம் ரவிராஜ் (8556)


# குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்களை சட்டத்துக்கு முன்நிறுத்த வேண்டும்

## அமெரிக்க இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட பாரிய குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமாக இருந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ வலியுறுத்தியுள்ளார்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகவே அமெரிக்காவும் போராடுகின்றது என குறிப்பிட்ட அவர், இலங்கையுடன் இணைந்து இதற்கான நடவடிக்கையை முன்னெடுப்போம் என கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்பு தொடர்பாக [illegible] நேற்று திங்கட்கிழமை [illegible] சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை இலங்கை பிரதமர் மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தை தொடர்புகொண்டதாக குறிப்பிட்ட அவர், தேவையான உதவிகளை செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

சுமார் 80 நாடுகள் இன்று ஐ.எஸ். தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளதாக குறிப்பிட்ட பொம்பியோ, இது பாரிய அச்சுறுத்தலாக காணப்படுகின்றதென குறிப்பிட்டார்.

இந்நிலையில், உலகளாவிய ரீதியில் இந்த அச்சுறுத்தலை முறியடிப்பது அவசியமென பொம்பியோ மேலும் குறிப்பிட்டார். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடர் குண்டுவெடிப்பு பலி எண்ணிக்கை 290 ஆக அதிகரிப்பு

இலங்கையில் எட்டு இடங்களில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 290 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 450 ஆக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

## தபால் சேவைகள் பாதிப்பு

கொழும்பிலிருந்து இடம்பெறவிருந்த இரவுத் தபால் புகையிரதங்களில் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இரவுத் தபால் புகையிரதங்களின் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டிருப்பதாக பயணிகள் தெரிவித்தனர்.

இது ஒரு புறமிருக்க இரவுத் தபால் புகையிரதங்களின் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் தினமும் இடம்பெறக் கூடிய இயல்பான தபால் சேவைகளும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக தபால் பெறுநர்கள் தெரிவித்தனர். (இ-7)

## எந்தவொரு அடிப்படைவாத இயக்கங்களும் நாட்டுக்குள் செயற்பட இடமளியோம்-அரசு

(கொழும்பு)

எந்தவொரு அடிப்படைவாத இயக்கமும் நாட்டுக்குள் செயற்பட இடமளியோம் என்றும் தாக்குதல் நடத்திய சூத்திரதாரிகளைத் தேடும் நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் ஊடக அமைச்சருமான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் தேவையான ஆலோசனைகள் முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய பாதுகாப்புப் படையினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் நாட்டின் முக்கிய பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் எவராக இருந்தாலும் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளிகளைத் தண்டிப்பதில் பாதுகாப்புப் படையினர் பாரபட்சமற்ற முறையில் செயற்படுவார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## மட்டக்களப்பில் துக்கதினம்




(ஏறாவூர்)

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் வாழைமரம் நட்டு வெள்ளைக் கொடி கட்டி துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு வெள்ளைக் கொடி கட்டப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள், அரச மற்றும் தனியார் வங்கிகள் இயங்கவில்லை.

போக்குவரத்து நடைபெற்ற போதிலும் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தில் பல இடங்களில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புறக்கோட்டை பேருந்து நிலையத்தில் 87 டெட்டனேட்டர்கள் நேற்று மீட்பு

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையில் தனியார் பேருந்து நிலையத்தில் வெடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் (Detonators) பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 87 குண்டுகளுக்கான சாதனங்களைக் கண்டுபிடித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## கொழும்பில் தொடர் குண்டுவெடிப்பு 1000 இராணுவத்தினர் குவிப்பு!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் 8 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புப் பகுதியில் மட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 1000 இற்கும் அதிகமான இராணுவத்தினரை ஈடுபடுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களிலும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டிற்குச் செல்பவர்கள் ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமாயின் 116 என்ற இலக்கத்திற்கு அழைத்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## குண்டுவெடிப்புக்களில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பரவலாக இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூர்ந்து யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (இ-9)

## ஊரடங்கு சட்டத்தை மதிக்காது நள்ளிரவில் நடமாடிய நபர் நெல்லியடி பொலிஸாரால் கைது

(கரணவாய்)

கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணியிலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 6 மணிவரை பொலிஸாரால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந் நிலையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நெல்லியடி நகரில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் மது போதையில் இருந்ததால் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, ஊரடங்குச் சட்டத்தை மதிக்காது நடமாடியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் விசாரணை செய்ய விசேட குழு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக விசேட குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.



உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'பின்னியெடுத்தார்' பண்ட்

## ● இறுதி ஓவரில் டில்லி வெற்றி
## ● வீணானது ரஹானேயின் சதம்


சதம் அடித்த மகிழ்வில் ராஜஸ்தானின் ரஹானே

ஐ.பி.எல். போட்டியில் ரிஷாப் பண்ட் 78 ஓட்டங்கள் விளாச, டில்லி அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரகானே சதம் அடித்த போதும் ராஜஸ்தான் வெற்றிக்கு போதவில்லை.

ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் தற்போது நடக்கிறது. நேற்று ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், டில்லி அணிகள் மோதின. 'நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**சாம்சன் 'டக்'**

ராஜஸ்தான் அணிக்கு சஞ்சு சாம்சன், ரகானே ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இஷாந்த் வீசிய போட்டியின் 2ஆவது பந்தில் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார் ரகானே. மறுபக்கம் சாம் சன் வீணாகரன் அவுட்டானார். ரகானே, ஸ்மித் இணைந்தனர்.

அக்சர் படேல். ரபாடா ஓவர்களில் தலா ஒரு சிக்சர், பவுண்டரி என விளாசிய ரகானே வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். ரூதர்போர்ட் ஓவரில் ஸ்மித் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்தார். இவர் 32 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

**ரகானே அபாரம்**

ஸ்ரோக்ஸ் 8 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 17 ஓட்டங்களில் இஷாந்த் தயவில் தப்பிய ரகானே, மறுபக்கம் அசத்தலை தொடர்ந்தார். இவர் ஐ.பி.எல்., அரங்கில் இரண்டாவது சதம் கடந்தார். இதற்கு முன் கடந்த 2012ல் பெங்களூருக்கு எதிராக சதம் விளாசி இருந்தார். பின் வந்த அஷ்டன் ரேர்னர் 'டக்' அவுட்டாகி திரும்பினார். ஸ்ரூவேர்ட் பின்னி 13 பந்துகளில் 19 ஓட்டங்கள் எடுத்தார். பராத் (4) போல்டானார்.

20 ஓவர்கள் நிறைவில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை எடுத்தது. ரகானே (105) ஆட்டமிழக்காமல் இருந்தார். டில்லி அணியின் ரபாடா அதிகபட்சமாக 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**தவான் அரைசதம்**

கடின இலக்கைத் துரத்திய டில்லி அணிக்கு ஷிகர் தவான், பிரித்வி ஷா ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. இந்த சீச னில் முதன்முறை யாக இந்த ஜோடி, முதல் விக்கெட்டுக்காக 50 ஓட்டங்களுக்கும் மேல் சேர்த்தது. தவான் 25 வது பந்துகளில் அரைச் சதம் அடித்தார். இவர் 54 ஓட்டங்கள் எடுத்த போது, கோபால் சுழலில் 'ஸ்ட மட்' ஆனார்.

ஸ்ரேயாஸ் (4) ஏமாற்ற, ரிஷாப் பண்ட் பவுண்டரி மழை பொழிந்தார். இவர் ஆர்ச்சர் பந்தில் சிக்சர் அடித்து அரைசதம் கடந்தார். பிரித்வி 42 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி நேரத்தில் ஆர்ச்சர், உனத்கட் பந்துகளில் சிக்சர்கள் அடித்த ரிஷாப், வெற்றியை உறுதி செய்தார்.

டில்லி அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரிஷாப் (78 ஓட்டங், 36 பந்து), இங்ராம் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக டில்லியின் ரிஷாப் பண்ட் தெரிவானார்



டில்லி அணியின் வெற்றிக்கு வித்திட்ட ரிஷப் பண்டின் அதிரடிகளில் ஒன்று

# எழுச்சி பெறுமா சென்னை கிங்ஸ்?

## இன்று ஹைதராபாத்துடன் மோதல்

ஐ.பி.எல்., தொடரில் இன்று சென்னை, ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன. இதில் சென்னை அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினால், 'ஹட்ரிக்' தோல்வியை தவிர்த்து வெற்றிப் பாதைக்கு திரும்பலாம்.

இந்தியாவில், 12ஆவது ஐ.பி.எல்., கிரிக் கெட் தொடர் நடக்கிறது. சென்னை, சேப் பாக்கம் மைதானத்தில் இன்று நடக்கும் லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, ஹைதராபாத் அணியை எதிர்கொள் கிறது.

சென்னை அணி, இதுவரை விளையாடிய 10 போட்டிகளில், 7 வெற்றி, 3 தோல்வியை பெற்றது. இன்னும் ஒரு போட்டியில் வென்றால் 'பிளே-ஓப்' சுற்றுக்கான இடத்தை உறுதி செய்யலாம். ஆனால் கடைசியாக விளையாடிய 2 போட்டிகளில் ஹைதராபாத், பெங்களூர் அணிகளிடம் தோல்வியடைந்தது. இதில் பெங்களூர் அணிக்கு எதிராக கடைசி பந்தில் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வீழ்ந்தது.

**தோனி நம்பிக்கை**

சென்னை அணியின் 'ரொப்ஓர்டரில்' ஷேன் வோட்சன் (147 ஓட்.,). அம்பதி ராயுடு (192), ரெய்னா (207) பெரிய அளவில் சோபிக்காதது ஏமாற்றம். இது, பின்வரிசையில் களமிறங்கும் அணித் தலைவர் தோனிக்கு (314 ஓட்.,) நெருக்கடியாக அமைகிறது.

டு பிளசி (178 ஓட்., 6 போட்டி) ஓரளவு கைகொடுக்கிறார். 'சகலதுறை வீரர்களான' ரவிந்திர ஜடேஜா (76 ஓட்., 10 போட்டி), டுவைன் பிராவோ (44 ஓட்., 5 போட்டி) அதிரடி காட்டினால் நல்ல ஓட்டஎண்ணிக் கையைப் பெறலாம்.

வேகப்பந்துவீச்சில் தீபக் சகார் (13 விக்கெட்) நம்பிக்கை அளிக்கிறார். இவருக்கு ஷர்துல் தாகூர் (6 விக்.,) ஒத்துழைப்பு கொடுத்தால் நல்லது. 'சுழலில்' அசத்தி வரும் இம்ரான் தாகிர் (16 விக்.,). ரவிந்திர ஜடேஜா (9), ஹர்பஜன் (7) கூட்டணி மீண்டும் சாதிக்கலாம்.

சொந்த மண்ணில், உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் சென்னை அணியினர் எழுச்சி காணும் பட்சத்தில், ஹைதராபாத் அணிக்கு பதிலடி கொடுத்து வெற்றிப் பாதைக்கு திரும்பலாம்.

**வோர்னர் அபாரம்**

ஹைதராபாத் அணி, இதுவரை விளையாடிய 9 போட்டிகளில், 5 வெற்றி, 4 தோல்வி என, 10 புள்ளிகளுடன் உள்ளது. கடைசியாக விளையாடிய 2 போட்டிகளில் சென்னை, கொல்கத்தா அணிகளை வென்ற உற்சாகத்தில் களமிறங்குகிறது.

'ரொப் ஓர்டரில்' டேவிட் வோர்னர் (517 ரன்), ஜானி பேர்ஸ்டோவ் (445) ஜோடி சிறப்பான ஆரம்பம் அளித்து வருவது பலம். ஆனால் 'மிடில் ஓர்டரில்' விஜய் சங்கர் (139 ஓட்.,), யூசுப் பதான் (32), தீபக் ஹூடா (60), மணிஷ் பாண்டே (54), அணித் தலைவர் வில்லியம்சன் (28) சொல்லிக் கொள்ளும்படி விளையாடாதது பின்னடைவு.

வேகப்பந்துவீச்சில் சந்தீப் சர்மா (9 விக்கெட்), கலீல் அகமட் (9), புவனேஷ்வர் குமார் (7), சித்தார்த் கவுல் (6) ஓரளவு கைகொடுக்கின்றனர். 'சகலதுறை வீரர்' விஜய் சங்கர் விக்கெட் வீழ்த்தினால் நல்லது. 'சுழலில்' ரஷித் கான் (9 விக்.,) நம்பிக்கை அளிக்கிறார்.




# அசைக்க முடியாத அவுஸ்திரேலியா



ஏழாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் 1999ல் நடந்தது. இதில் பெரும்பாலான போட்டிகள் இங்கிலாந்திலும் ஒரு சில போட்டிகள் அயர்லாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, நெதர்லாந்திலும் நடந்தன. காலிறுதிக்கு பதிலாக ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடித்த அணிகள் 'சுப்பர் 6' சுற்றுக்கு முன்னேறின.

இச்சுற்றில் கிடைக்கும் புள்ளிகள் மற்றும் ஓட்ட விகிதம் அரையிறுதியிலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்ற விதிமுறை சர்ச்சையை கிளப்பியது. லீக் சுற்றில் அதிர்ச்சி தோல்விகள் அரங்கேறின. இந்தியா, தென்னாபிரிக்க அணிகளை பலம் குன்றிய சிம்பாப்வே வீழ்த்தியது. பங்களாதேஷ் அணி, பாகிஸ்தானை தோற்கடித்தது.

'சுப்பர் 6' சுற்றில் இந்திய அணி (227/6), பாகிஸ்தானை (180) வீழ்த்தியது. ஆனால் அவுஸ்திரேலியா, நியூசிலாந்திடம் தோல்வியடைந்து அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

**பரபரப்பான அரையிறுதி**

முதலாவது அரையிறுதியில் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதிய 2வது அரையிறுதியில் 'டென்ஷன்' எகிறியது. இரு அணிகளும் 213 ஓட்டங்கள் எடுக்க, போட்டி சமனிலையானது. பின் 'சுப்பர் 6' பிரிவில் அதிக 'ஓட்ட விகிதம்' பெற்றதன் அடிப்படையில் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

**பாக்., சொதப்பல்**

லோர்ட்ஸில் நடந்த இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி 39 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கு சுருண்டது. சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு கில்கிறிஸ்ட் (54) கைகொடுத்தார்.

20.1 ஓவரில் அவுஸ்திரேலியா அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் அவுஸ்திரேலியா 2ஆவது முறையாக உலக கிண்ணத்தைக் கைப்பற்றியது.

**நாயகன் குளூஸ்னர்**

உலக கிண்ண வரலாற்றில் தென்னாபிரிக்காவின் குளூஸ்னர் சிறந்த 'சகலதுறை வீரராக' ஜொலித்தார். 1999ல் நடந்த தொடரில் 9 போட்டிகளில் 281 ஓட்டங்கள் (சராசரி 140.50) எடுத்தார். இதன் 'ஓட்ட வேகம்' 122.17. பந்துவீச்சில் அசத்திய இவர், 17 விக்கெட்டுக்களை சாய்த்தார். இதன்மூலம் தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

## திரு. வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணர்

(BSc. Dip in Edu)

**சேவை விபரம்**

- ❖ கா/ துந்துவ முஸ்லிம் வித்தியாலயம். 04.12.1985-10.09.1987 வரை
- ❖ கா/ மல்கருசுல்கியா மத்திய கல்லூரி 11.09.1987-20.03.1990 வரை
- ❖ யா/ வட்டு இந்துக் கல்லூரி 21.03.1990-22.04.2019 வரை

எமது கல்லூரியில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாகக் கணிதபாட ஆசிரியராகத் தன்நலம் அற்ற சேவையை அர்ப்பணிப்புடன் நல்கி 23.04.2019 இல் தனது அறுபதாவது அகவையில் காலடி வைக்கும் கல்லூரியில் விசுவாசமுள்ள பழைய மாணவனும், ஆசிரியருமான

**திரு.வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணர்**

அவர்களுக்கு எமது இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் தனது ஓய்வுக் காலத்தில் நலமோடு மகிழ்ச்சியாகத் தன் குடும்பத்தினருடன் நீண்டகாலம் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நலமுடன்!



Best Wishes

(8551)

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ வட்டு இந்துக் கல்லூரி,**
**சித்தன்கேணி.**

## இராசி பலன்

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்களால் நன்மையுண்டு.

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**கிரகநிலை**

சுக், புத | சூரி | செவ் | ராகு

சனி, குரு, கேது | சந்

சந்திராஷ்டமம்: கார்த்திகை, ரோகினி

**23.04.2019**
சித்திரை 10, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 2.27 மணிவரை
கேட்டை முன்னிரவு 8.23 மணிவரை
சுபநேரம் 10.30- 12.00 மணிவரை
இராகுகாலம் 3.00-4.30 மணிவரை

வளவன்

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்வங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**தனுசு:** சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், உடல் நலனில் சிறுசிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும், பிரியமான ஒருவரைச்சந்திக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புதிய கூட்டாளிகளை சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெற வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு.

**கன்னி:** கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக மனித உயிர்களுடன் விளையாடாதீர்கள்

## குண்டு வெடிப்பு குறித்து யாழ்.ஆயர் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உயிர்ப்பு பெருவிழா தினத்தில் இலங்கை நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களால் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். இறந்த அனைவரும் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்திருப்பினும் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இளைப்பாற இறையருள் வேண்டுகிறோம்.

இந்த நிகழ்வுகளால் காயப்பட்டும் இழப்பினால் வேதனைப்பட்டும் துடிக்கும் அனைவரின் துன்பத்தில் நாமும் முழுமையாக பங்கெடுத்து அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். துன்பத்தில் துடிக்கும் குடுப்பத்தினருடன் நாமும் செபத்தில் இணைந்திருக்கிறோம்.

இறைவனே இவர்களோடு இருந்து இத்துன்ப அனுபவங்களை தாங்க துணை புரிவாராக. இவர்களின் துன்பத்தை இறைவனே அமைதிப்படுத்த வேண்டும் என யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.



கடந்த மூன்று தசாப்த கால போரின் பின்னர் அரசியல் நோக்கம் கொண்டு நடத்தப்பட்டது என்றும் குறிப்பாக கிறிஸ்தவ மதத்தினரை நோக்கி நடத்தப்பட்டவை என்றும் எண்ணப்படும் இந்தத் தாக்குதல்கள் அர்த்தமற்றவை. இந்தத் தாக்குதல்களை மிகவும் கடுமையாகக் கண்டிக்கிறோம். இதில் ஈடுபட்டவர்கள் யாராயினும் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு உரிய விதமாக தண்டிக்கப்பட வேண்டும். இதில் அரசு இதய சுத்தியுடன் செயற்பட்டு நீதியையும் அமைதியையும் உடன் நிலை நிறுத்தி இதுபோன்ற சம்பவங்கள் இனி ஒருபோதும் நடைபெறாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என வேண்டுகிறோம்.

இலங்கை மண் இதுபோன்ற துன்ப அனுபவங்களை மிக அதிகமாகவே அனுபவித்துள்ளது. இனியும் இது போன்ற துன்ப அனுபவங்கள் எமக்கு வேண்டவே வேண்டாம் என சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மிகமிக அன்பாக வேண்டுகிறோம். தனிப்பட்ட அரசியல் அல்லது வேறு இலாபங்களுக்காக மனித உயிர்களுடன் விளையாடாதீர்கள்.

இதில் ஈடுபட்டவர்களே இறைவன் உங்களுக்கு உரிய தீர்ப்பு தருவார் என்பதை மறக்காதீர்கள். இதனால் நாட்டின் பொருளாதாரம், சுற்றுலாத்துறை,அமைதி, பாதுகாப்பு என்பன எல்லாம் கேள்விக்குறியாக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வு என்பனவே பாதிப்படையும். இன,மத தேசிய ஒற்றுமையையும் பாதுகாப்பையும் உடன் நிலை நிறுத்த அரசிடமும் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மிக அன்பாக வேண்டுகிறோம்.

நாம் அனைவரும் பதற்றமடையாது அமைதியாக இருந்து நாட்டில் அமைதி மிக விரைவாக நடைமுறைப்படுத்தப்பட செபிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். இறைவன் இலங்கை மக்களோடு என்றும் துணை நின்று பாதுகாத்து வழி நடத்துவாராக என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்த வேண்டும்

## மாவை.எம்.பி.வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ மக்களுக்கு "ஈஸ்டர்"- இயேசு உயிர்ப்புக் கொண்டாட்டம் ஒரு முக்கியமானதாகும். இந்நாளில் கிறிஸ்தவ தேவாலயங்களைக் குறிவைத்துத் தற்கொலைத் தாரிகளால் சில இடங்களிலும் வேறு இடங்களில் மர்மமான முறையிலும் பாரிய குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளமைக்கு நாம் அனைவரும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இத்தகைய சம்பவங்களை எதிர்க்க வேண்டும். கொழும்பில் முக்கிய விடுதிகள், மக்கள் கூடும் இடங்களிலும் இப் பாரிய குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இச் செய்கைகள் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு கொடிய மனித குலத்துக்கு எதிரான செயலாகும். அதுவும் மத நம்பிக்கைகளுக்கு எதிரான குறிப்பாக கிறிஸ்தவ மதத்தவருக்கு எதிரான கொடிய செயலாகும். உடனடியாக அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி மக்களை பாதுகாக்கவும் உயிருக்கு போராடுவோரை, காயம் பட்டோரை அவசர சிகிச்சையளிக்கவும். நடவடிக்கை எடுப்பதாக அறிகின்றோம்.

இச் செய்கைகள் திட்டமிட்ட நடவடிக்கைகளை உளவுத்துறை, பாதுகாப்புத் துறை அறிந்திருக்கவில்லையா? என்பது முக்கிய கேள்வியாக இருக்கிறது. பாதுகாப்புத் துறையின் பலவீனத்தையோ அல்லது தெரிந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல் விடப்பட்டதா? என்பதும் ஆராயப்பட வேண்டும். அரசு நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்திய காலங்களில் பாதுகாவலர்களே அத்துமீறிய சம்பவங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும். இச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் இளைஞர்களைப் பழிவாங்கவும் இடமளிக்கக் கூடாது.

மதங்களுக்கு, இனங்களுக்கு இடையிலான இனவாத, மதவாத வன்முறை நடவடிக்கைகளை அரசும், சர்வதேச சமூகமும் தடுத்து நிறுத்த வேண்டும்.

மக்களின் மதங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசும், மதத் தலைவர்களும், அரசியல் சமூகத் தலைவர்களும் ஒன்றுபட்டு சமாதானத்தை, அமைதியை ஏற்படுத்த உறுதிபூண வேண்டும் என வற்புறுத்துகிறோம்.

உயிர்களைப் பலி கொடுத்த குடும்பங்களுக்கும், காயங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், இழப்புக்களைச் சந்தித்தோருக்கும் அஞ்சலியையும், அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அப்பாவிப் பொதுமக்களை குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் அப்பட்டமான பயங்கரவாதமே

## ஈ.பி.ஆர்.எல்.எப்.கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தொடர் குண்டுத்தாக்குதல்கள் அனைத்தும் அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்தே நடத்தப்பட்டுள்ளன. இக்கொடூரத் தாக்குதல்களால் 200 இற்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் 450 இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிர்த்த ஞாயிறு தின பிரார்த்தனையில் மக்கள் ஈடுபட்டிருந்த தேவாலயங்கள், அதிக மக்கள் நடமாட்டம் மிகுந்த மிருகக்காட்சிச் சாலையின் அயலில் உள்ள விடுதி மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் என அனைத்தும் பொதுமக்கள் கூடும் இடங்களாகும்.

இந்த மனிதாபிமானமற்ற குரூரத்தாக்குதல் திட்டமிட்டே செயற்படுத்தப்பட்டுள்ளமை புலனாகிறது. இதனை அப்பட்டமான மனிதகுலத்திற்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கையாகவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நோக்குகிறது. கோழைத்தனமான இக் கொடிய தாக்குதலை எந்த நோக்கத்தில் எவர் செய்திருந்தாலும் அதனை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்தும் தமது விடுமுறையை சந்தோசமாகக் கழிக்க வந்திருந்த அப்பாவி சுற்றுலாப் பயணிகள் 30 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்தும் உள்ளனர். சுற்றுலாப்பயணிகளுக்குரிய பாதுகாப்பின்மை என்பது, நாட்டை வெட்கப்படவைக்கும் செயலாகும்.

மனிதகுலத்திற்கு எதிரான பயங்கரவாதிகளான இக்குற்றவாளிகளையும் அதன் சூத்திரதாரிகளையும் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் கடமையை அரசு நேர்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகிறது. படுகொலை செய்யப்பட்ட அனைவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் இவர்களை இழந்து தவிக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரின் துயரங்களுடனும் நாமும் பங்கு கொள்கிறோம். காயமடைந்த அனைவரும் விரைவில் பூரண சுகம் பெற பிரார்த்திக்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-7)



# தொடர் குண்டுவெடிப்பையடுத்து எரிபொருளுக்கு முண்டியடிப்பு



கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை அதிகளவான பொதுமக்கள் எரிபொருள் நிரப்புவதற்கு முண்யடித்தனர்.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அதிகளவான பொதுமக்கள் எரிபொருள் நிலையத்தில் ஒன்று கூடினர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-10-114)

# புதிய அனுமதிகள்

யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டமானது 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2019 ஆம் ஆண்டிற்கான புதிய அனுமதிகள் நாளை 24 ஆம் திகதி தொடக்கம் 06.05.2019 வரை வழங்கப்படும். அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையால் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ

# மனிதவுரிமைகள் அமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து நாம் கவலையடைகின்றோம். மேலும் கிறிஸ்தவரின் மிக முக்கியமான வழிபாட்டு நாளாகிய நேற்று முன்தினம் நடந்த இந்தத் தாக்குதலானது மிருகத்தனமான மற்றும் மனிதநேயமற்ற செயலாக நாம் கருதுகின்றோம்.

அத்துடன் எல்லா மனித உயிர்களும் பெறுமதியானது. அவை பாதுகாக்கப்பட வேண்டியது.

எனவே இலங்கை அரசாங்கம் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படியாக கேட்டுக்கொள்கின்றோம் என மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (இ

# புத்தாண்டு விழாக்கள் பிற்போடல்


(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் சமுர்த்தி பயனாளிகளுக்கு நடத்தப்படவிருந்த புத்தாண்டு விழாக்கள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற் பட்ட அசாதாரண சூழ்நிலையைக்கருத்தில் கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-10-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நீதியரசர் விக்னேஸ்வரன் கண்டனம்



(கொழும்பு)

புனித உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று முன்தினம் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அதேவேளை உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் காயம் அடைந்து சிகிச்சை பெறுபவர்களின் துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கின்றோம்.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் சென்று காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் மக்களைப் பார்த்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் பல விடயங்களை உணர்த்தி இருக்கின்றன என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன, மத ஏற்றத் தாழ்வுகள் இந்தத் தீவில் இருக்கும்போது அதனூடாக ஏற்படும் முரண் நிலைகளை சந்தர்ப்பவாத குழுக்களும் அந்நிய சக்திகளும் தமது நோக்கங்களை அடைவதற்கான வாய்ப்பாகவே பயன்படுத்த முயல்வார்கள்.

ஆகவே நிலையான சமாதான பூமியாக இத்தீவை மாற்றுவதற்கு எமது அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் துணிச்சலுடன் முன்வர வேண்டும். எமது அரசியல் சாசனமும் சட்டமும் சகல இன, மத சமூகங்களுக்கும் சமத்துவத்தையும் பாதுகாப்பையும் நல்கும் விதத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதன் அவசியத்தை இந்தத் தாக்குதல்கள் இன்று எமக்கு உணர்த்தியுள்ளன.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஒரு இனத்தை அடக்கியாள்வதற்காக இராணுவத்தை வடக்கில் நிலைநிறுத்தி வைத்திருக்காமல் நாட்டின் அனைத்து மக்களுக்குமான உண்மையான பாதுகாப்பை வலியுறுத்தும் விதத்தில் சீர்தூக்கிப் பார்த்து அதனை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் தொகைக்கு ஏற்ப சகல மாகாணங்களுக்கும் இராணுவத்தைப் பரவலாக்கம் செய்யவேண்டிய தன் அவசியத்தையும் இந்தத் தாக்குதல்கள் வலியுறுத்துகின்றன.

2009 இற்கு பின்னர் இலங்கை ஊடாக அந்நிய சக்திகளின் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களையும் இந்தத் தாக்குதல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆகவே, இந்தியா தனது நலனை மட்டும் கருத்தில் கொள்ளாமல் தனது பாதுகாப்பானது இலங்கைத் தீவின் உண்மையான அமைதியிலேயே தங்கியிருக்கிறது என்பதைப் புரிந்து மதச் சார்பற்ற, வடக்கு-கிழக்கு இணைந்த, உச்ச அதிகாரம் கொண்ட ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை இலங்கையில் ஏற்படுத்தி தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு முன்னின்று பாடுபடவேண்டிய தன் அவசியத்தையும் இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இந்தியாவுக்கு உணர்த்துகின்றன.

இந் நாட்டின் பெரும்பான்மையின மக்கள் தமது நண்பர்கள் யார் என்பதை அலசி ஆராய வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தையும் இந்தச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

காட்டுமிராண்டித்தனமான இந்தத்தாக்குதல்களை மேற்கொண்டவர்களையும் அவர்களுக்கு உடந்தையாக நின்றவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையாகத் தண்டிக்க சகல தரப்பினரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தத் தாக்குதல்களில் காயப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் மருத்துவ மற்றும் முதலுதவி உதவிகள் மேலும் ஏனைய உதவிகள் செய்த மருத்துவர்கள், தாதிமார்கள், பொது மக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆயர் - ஆளுநர் சந்திப்பு ஆழ்ந்த கவலை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முற்பகல் ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது நேற்று முன்தினம் கிறிஸ்தவர்களின் புனித நாளான உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் ஆழ்ந்த கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்த ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (இ-7)

# இலங்கையில் உயிரிழந்தவர்களுக்கு இந்திய சிற்பக்கலைஞர் இரங்கல்




இலங்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்க ளால் பொதுமக்கள், வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்ட நிலையில் இந்திய மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் இலங்கை மக்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து மணல் சிற்பமொன்றை வடிவமைத்துள்ளார். அந்த மணல் சிற்பத்தில் நாங்கள் இலங்கையுடன் நிற்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# வடமராட்சியிலும் இராணுவம் களமிறக்கம்!

கொழும்பு, மட்டக்களப்பு பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களையடுத்து வடமராட்சி பகுதிகளிலும் இராணுவம் களமிறக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தேவாலயம், ஹோட்டல்கள் ஆகியவற்றில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து இலங்கையின் சகல பிரதேசங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் வடமராட்சியில் இராணுவத்தினர் பவள் கவச வாகனங்களில் சுற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்த காலத்தில் இராணுவத்தினர் அணியும் தலைக்கவசத்துடன் பவள் கவச வாகனத்தில் சுற்று ரோந்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 100 | 160 |
| தக்காளி | 70 | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | — | 120 | 110 | 100 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 90 | 160 |
| பூசணி | 50 | 20 | 30 | 40 |
| புடோல் | 100 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 100 |
| பாகற்காய் | 150 | 140 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | — | 40 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 70 | 160 |
| பீற்றூட் | 80 | — | 40 | 120 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 240 | 200 |
| போஞ்சி | 220 | — | 210 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | — | 35 | 50 |
| கீரை-1பிடி | 35 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 140 | 110 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 80 | 35 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 110 | 80 |




# பரபரப்பை தவிர்க்கவும்

(கொழும்பு)

ஊடகங்கள் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தத் துயரமான சந்தர்ப்பத்தில் மக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் செயற்படக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டை மீண்டும் இருள் சூழ்ந்த காலத்திற்கு இழுத்தச் செல்லும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என அவர் டுவிட்டர் பதிவொன்றின் மூலம் கோரியுள்ளார். (இ-7)




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் குண்டுவெடிப்பு

# எமது மக்கள் இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

## செல்வம் எம்.பி.கோரிக்கை



(வவுனியா)

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் அப்பாவி மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களானது மிலேச்சதனமான செயலென தமிழீழவிடுதலை இயக்கத்தின் தலைவரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மற்றும் மத ஸ்தலங்கள், நட்சத்திர விடுதிகளில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் தனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றது.

அப்பாவி மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த சம்பவங்களானது மிலேச்சதனமான செயலென தமிழீழ விடுதலை இயக்கம் கருதுகின்றது. பல்வேறு துன்பங்களை அனுபவித்த இலங்கை மக்கள் மீண்டும் இவ்வாறானதொரு அசம்பாவித நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாததாகவுள்ளது. அதிலும் குறிப்பாக கிறிஸ்தவர்களுடைய புனித நாளான உயிர்த்த ஞாயிறு தினத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமையை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது நாட்டு மக்களை மீண்டும் ஒரு குழப்ப நிலைக்கு இட்டுச்செல்லும் செயற்படாகவே அமைந்திருக்கிறது.

எனவே இந்த நேரத்தில் இலங்கை மக்கள் இனம், மதம், மொழி என்பவற்றை கடந்து ஒற்றுமையுடன் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் சமாதானத்திற்கும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டிய தருணம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-250)

# விடத்தல்தீவு தேவாலயம் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் விடத்தல்தீவு கிறிஸ்தவ தேவாலயத்திலும் நேற்று முன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இக்குண்டுத் தாக்குதலில் உயிர்ச்சேதங்கள் எவையும் இடம்பெறவில்லை என அறிய முடிகிறது.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற தேவாலயத்தை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு பொலிஸார் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (மு-286)

## புலிகளுக்குத் தொடர்பில்லை

# சர்வதேச தீவிரவாத அமைப்புகள் மீது சந்தேகம்

## ஜனாதிபதியின் ஆலோசகர் சிரால்

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு சர்வதேச தீவிரவாத அமைப்புகளே காரணமென ஜனாதிபதியின் ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்புச் செயலாளர் சிரால் லக்திலக தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அவர், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இதற்கும் தொடர்பு இருக்க வாய்ப்பு இல்லை. இறுதி யுத்த காலத்தில் கூட இதுபோன்ற தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு நைஜீரியாவிலும் 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலும் கிறிஸ்தவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களைப் போல, இந்தத் தாக்குதலும் இருக்கின்றன. எனவே இந்தத் தாக்குதலின் பின்னணியில் வெளிநாட்டு தீவிரவாத அமைப்புகள் இருக்கக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மன்னார் பொது வைத்தியசாலையில் இளைஞர், யுவதிகள் இரத்ததானம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் 50 இற்கும் மேற்பட்டோர் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அதிகளவிலான குருதிகள் தேவைப்பட்டன.

இந் நிலையைக் கருத்திற் கொண்ட இளைஞர், யுவதிகள் தாமாகவே முன்வந்து இரத்தத்தை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய தினமும் அதிகளவிலான குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்க மன்னார் வைத்தியசாலைக்கு வந்த போதும் தேவையான குருதிகள் கிடைக்கப் பெற்றதால் வருகை தந்தவர்களின் தொலைபேசி இலக்கங்களைப் பதிவு செய்து திருப்பி அனுப்பப்பட்டனர். (7-10-286)

# நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கடும் கண்டனம்

(மன்னார்)

நாட்டின் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்கள் முழு நாட்டையும் ஏன் முழு உலகையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன. இத்தாக்குதல்களால் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளனர். இன்னும் பல நூறு பேர் காயமடைந்துள்ளனர்.

மனித உயிர்களைத் துச்சமென மதித்து, வணக்கத்தலங்களிலும் ஏனைய இடங்களிலும் திட்டமிட்டு நடத்தப்பட்ட இத் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், குறித்த தாக்குதல்களின் போது இறந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிப்பதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம். தம் அன்புக்குரியவர்களை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அனைவருக்கும் இரக்கமுள்ள இறைவன் ஆறுதலை அளிக்க வேண்டுமென மன்றாடுகின்றோம். கொழும்பு உயர் மறை மாவட்டத்திற்குட்பட்ட கத்தோலிக்க ஆலயங்களான கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு கற்றுவப்பிற்றிய புனித செபஸ்தியார் ஆலயத்திலும் மற்றும் மட்டக்களப்பு சீயோன் கிறிஸ்தவ ஆலயத்திலும் இயேசுவின் உயிர்ப்பு விழா ஆராதனையின் போது இடம்



பெற்ற இத்தாக்குதல்கள் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வேளையில் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர், குறிப்பிட்ட ஆலயங்களின் பங்குத் தந்தையர்கள் மற்றும் இறை மக்களுக்கும் மட்டக் களப்பு கிறிஸ்தவ சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். இத்துன்பமான வேளையில் எமது சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம். மனிதநேயமற்ற மனிதர்களின் இத்தாக்குதல்களால் ஏதுமறியாத அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதுவும் வணக்கத்தலங்கள் இத்தாக்குதல்களுக்கான இலக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதையும் அவர்களின் நோக்கம் என்ன என்பதையும் விரைவான விசாரணைகள் மூலம் அரசு விரைவில் வெளிப்படுத்தும் என நம்புகின்றோம். இதுபோன்ற மனுக்குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது. இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இத்தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் மனம்மாற செபிப்போம் என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஊரடங்கு உத்தரவால் வெறிச்சோடிய கிளிநொச்சி





இலங்கையின் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பொது மக்களை இலக்கு வைத்த தீவிரவாதக் குண்டுத் தாக்குதலை அடுத்து நாட்டில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் கிளிநொச்சி நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. நாட்டில் நேற்று முன்தினம் தினம் மாலை 4.00 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி நகரமும் வெறிச்சோடியது.

வீதிகளில் மக்கள் நடமாட்ட மற்றும் கிளிநொச்சி நகர் பொதுச் சந்தை வர்த்தகர்கள் அவசர அவசரமாகத் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டிவிட்டு வெளியேறிச் சென்றதனையும் அவதானிக்க முடிந்தது. (7)

# மன்னாரிலும் தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு



(மன்னார்)

இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக தேவாலயங்களிலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்று வந்த குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட பாதுகாப்புக்களை வழங்கியுள்ளனர்.

குறித்த குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளதோடு பல நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நாட்டின் பல பாகங்களிலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் விசேட பாதுகாப்புக்களை மேற்கொண்டு வருவதோடு விசேட தேடுதல்களையும் தேவாலயங்களில் மேற் கொண்டுள்ளனர். (7-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானமற்ற ஈனச்செயல்

## குண்டு வெடிப்பிலிருந்து தப்பிய பிரி.எம்.பி.காட்டம்

(பிரிட்டன்)

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குண்டுத் தாக்குதல் சம்பவத்திலிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் கன்சர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நெர்ஜ் தேவா, பயணித்த விமானம் ஒரு மணித்தியாலம் தாமதித்த காரணத்தால் குண்டுத் தாக்குதலிலிருந்து தப்பித்துள்ளார்.

இந்த குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த அனைவரினதும் உறவினர்களுக்கு ஆழ்ந்த



இரங்கல்களை தெரிவிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கொடிய தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இது மனிதாபிமானமற்ற ஈனச் செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு மணித்தியாலம் விமான நிலையத்திலிருந்து தாமதமாக புறப்பட்ட காரணத்தினால் இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிர் பிழைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துச் சம்பவம் இடம்பெற்று முடிந்ததன் பின்னரே தாம் ஹோட்டலுக்கு சென்றிருந்ததாக நிர்ஜ் தேவா குறிப்பிட்டுள்ளார்.

இந்த குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஐந்து பிரித்தானியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# பயங்கரவாதத் தாக்குதலுக்கான பொறுப்பை ஜனாதிபதி மைத்திரியே ஏற்க வேண்டும்

ஈஸ்டர் ஞாயிறு தினமான நேற்று முன்தினம் இலங்கையில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குக்கான பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஏற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியுடன் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு மற்றும் பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் உள்ளதுடன் தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்கு பிரதமரையோ, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையோ ஜனாதிபதி அழைத்திருக்கவில்லை.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சை சாகல ரத்நாயக்கவிடம் இருந்து பறித்து தன்வசம் வைத்து கொண்டமை தொடர்பில் ஜனாதிபதி மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முப்படை, பொலிஸ் மற்றும் சகல புலனாய்வுப் பிரிவுகளுக்கும் பொறுப்பான நாட்டின் பாதுகாப்பு அமைச்சரான அவர் நாட்டில் இல்லாத நிலையில், நேற்று முன்தினம் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

இந்தியாவின் திருப்பதி ஆலயத்திற்கு சென்ற ஜனாதிபதி அங்கிருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார். தனிப்பட்ட வர்த்தகர் ஒருவரின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி சிங்கப்பூர் சென்றதாக கூறப்படுகிறது.

இராஜாங்க அமைச்சருக்கும் பொறுப்புக்களை வழங்கவில்லை. பயங்கரவாத தாக்குதல் நடைபெறவுள்ளதாக தகவல்கள் கிடைத்திருந்தும் அதற்கு ஏதுவான நடவடிக்கைகளை எடுக்காமைக்கான பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கிளைமோர் குண்டு கண்டுபிடிப்பு





(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய் வளன் நகர் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் பண்ணை வளாகத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கிளைமோர் குண்டு ஒன்றை மன்னார் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை காலை மீட்டுள்ளனர்.

குறித்த பண்ணையின் உரிமையாளர் பண்ணையை துப்புரவு செய்து கொண்டிருந்த போது முருங்கை மரத்தின் கீழ் வெடி பொருள் புதைத்து வைக்கப்பட்டுள்ளமையை அவதானித்த நிலையில், உடனடியாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதன்போது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மன்னார் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கிளைமோர் குண்டு ஒன்றே பொதி செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தமை தெரிய வருகின்றது.

நாட்டில் தொடர்ச்சியாக குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று வருகின்ற நிலையில், ஓலைத்தொடுவாய் வளன் நகர் பகுதியில் குண்டு மீட்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் ஓலைத்தொடுவாய் வளன் நகர்ப் பகுதியில் பிரசித்தி பெற்ற கர்த்தர் கோவிலின் அண்மையில் இருந்து தனியாருக்கு சொந்தமான பண்ணை ஒன்றில் இருந்து சந்தேகத்திற்கு இடமான வெடி பொருள் ஒன்று நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (7-285)

# பல்கலை. ஊழியர்களுக்கு துணைவேந்தர் அழைப்பு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களை இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கடமைக்குத் திரும்புமாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகப் பணிகளை செயற்படுத்தும் நோக்கில் இவ் அழைப்பு விடுவிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். (இ-10)

# கறுப்புக்கொடி ஏற்றி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி




(மன்னார்)

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைக் கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களுக்கு முன் கறுப்புக் கொடி ஏற்றி தமது அனுதாபங்களையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு சிறிது நேரத்தில் மூடப்பட்டது.

மேலும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன் கறுப்புக்கொடிகளை பறக்க விட்டு தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

இதேவேளை மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நகர சபை உறுப்பினர்கள் சிலர் மன்னார் பஸார் பகுதியில் கறுப்புக் கொடிகளைக் கட்டி தமது கண்டனத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். (7-285)

## விசேட அதிரடிப் படையினரால்

# யாழில் நேற்று இருவர் கைது விசாரணையின் பின் விடுவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நேற்று முன்தினம் 8 இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களையடுத்து யாழ்ப்பாணம் நகரில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் நகரில் இரண்டு அடையாள அட்டைகளுடன் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவரை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் காலை கைது செய்து, யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கையில் பயணப் பொதியுடன் ஒருவர் நடமாடியுள்ளார்.

அது தொடர்பில் அங்கிருந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர். தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்த நபரை விசாரணைக்கு உட்படுத்திய போது முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளார்.

வெளிமாவட்டத்தை சேர்ந்தவராக இருந்தமையால் சந்தேகத்தில் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-101)

# பொதுமக்கள் சாதாரணமான முறையில் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தகவல்

(கொழும்பு)

நேற்றுக்காலை 6 மணி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் பொது மக்கள் சாதாரணமான முறையில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



இதேவேளை, நேற்று இடம்பெறவிருந்த அதிபர் சேவைக்கான ஆங்கிலப் பாட பரீட்சை மற்றும் சில பரீட்சைகள் கால வரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையகம் அறிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படையினரின் தாக்குதலில் பயங்கரவாதிகள் 64 பேர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மூன்று மாகாணங்களில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 64 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்றையதினம் கிழக்கு காஸ்னியில் 7 பயங்கரவாதிகளும் டக்கார் மாகாணத்தில் 5 பயங்கரவாதிகளும் ஸாபுல் மாகாணத்தில் 28 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், வர்டாக் மாகாணத்தில் 17 பேர் உயிரிழந்துள்ள நிலையில், தெற்கு உருஸ்கான் மாகாணத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை பயங்கரவாதிகள் பதுங்குமிடங்களை குறிவைத்து இராணுவம் மற்றும் பொலிஸார் அடங்கிய சிறப்பு பாதுகாப்பு படையினர் நாடு முழுவதும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இலங்கையில் குண்டுத் தாக்குதல் உலக நாடுகள் கடும் கண்டனம்

தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகள் உள்ளிட்ட இடங்களில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நிகழ்ந்த பயங்கர குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காக அமெரிக்க மக்கள் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் அதேநேரத்தில், இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது என்பதையும் உறுதிபடக் கூறுகிறேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் தெரசா மே வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையில் தேவாலயங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்காகவும் இறைவனை பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரீசன், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உள்ளிட்ட தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (7)

# கொலம்பியாவில் மண்சரிவு 14 பேர் பரிதாபமாக மரணம்



கொலம்பியாவின் தென்மேற்கு மாகாணமான கவுகாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு தொடரும் அடை மழையால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக அந்நாட்டு அனர்த்த நிவாரண நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் மண்சரிவில் சிக்கி 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 8 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் வீதிகள் மூடப்பட்டதாகவும் அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலைப்பாங்கான பகுதிகளை கொண்ட கொலம்பியாவில் மழை காலத்தில் அதிகளவான வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# 14 குழந்தைகள் உட்பட 26 பேரின் உடல்கள் அரச செலவில் அடக்கம்

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்வதற்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் இணக்கம் தெரிவித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் உதயகுமார் தெரிவித்தார்.

இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசாங்கம் இணைங்கியுள்ளதுடன் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் முதற்கட்டமாக 60 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 40 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இச்சம்பவத்தில் 14 குழந்தைகளும் 7 பெண்களும் 5 ஆண்களுடன் 26 பேரின் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொலநறுவையிலிருந்து விசேட வைத்தியகுழு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வருகைதந்து சிசிச்சை அளித்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாத கொடூர செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன்

## இலங்கை குண்டுவெடிப்பு குறித்து ராகுல்

இலங்கை வெடிகுண்டு தாக்குதலுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு தாக்குதலில் 250 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 400 இற்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர். இச்சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில்,

இலங்கை குண்டு வெடிப்பு தொடர்பான செய்திகள் மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாதத்தின் கொடூரமான இந்தச் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு என்னுடைய இரங்கலை தெரிவிக்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைந்து குணம்



அடைய இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன் என மேலும் கூறியுள்ளார். (7)

# இலங்கை குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒரு நிமிடத்தில் உயிர் தப்பிய ராதிகா

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு நிமிடத்தில் உயிர் தப்பியதாக நடிகை ராதிகா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ராதிகா குறித்த சம்பவத்தில் சிக்கியதாகவும் ஒரு விநாடியில் உயிர் தப்பியதாகவும் அவர் டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

இலங்கை முழுவதும் தீவிர பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



# இலங்கை குண்டுவெடிப்பு துரதிர்ஷ்டவசமானது! அங்கு அமைதி திரும்ப வேண்டும் - தமிழிசை

(சென்னை)

இலங்கை குண்டுவெடிப்பு சம்பவம் துரதிர்ஷ்டவசமானது என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கருத்து



தெரிவிக்கும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவித்த அவர், "கலவரத்தைத் தூண்டுவோர் யாராக இருந்தாலும் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். இலங்கை குண்டு வெடிப்பு சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. அங்கு அமைதி திரும்ப வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

# புத்தக தின விழா பிற்போடல்

கொக்குவில் பொது நூலகத்தில் இன்று நடைபெறவிருந்த உலக புத்தக தின விழா பிற்போடப்பட்டுள்ளது.

உலக புத்தக தினத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வு நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதுடன் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (5)

# இலங்கை தாக்குதல் அருவருக்கத்தக்கது - பிரி.

இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்கள் மிகவும் அருவருக்கத்தக்க செயலென பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜெரமி ஹண்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்களில் சுமார் 250 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள ஜெரமி ஹண்ட்.

இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பின் நிலைமைகள் தொடர்பாக அங்குள்ள தூதரகம் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்ட ஹண்ட், gov.uk என்ற இணையத்தளத்தில் அவசர தொடர்பு வசதி காணப்படுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கையில் தமது அன்புக்குரியவர்கள் யாரேனும் விடுமுறையை கழிக்கச் சென்றிருந்தால் அவர்கள் தொடர்பாக அறிந்துகொள்ள இந்த அவசர தொடர்பு சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி எழுதும் 01
# புருஷோத்தமனுக்கான அறமடல்



**அன்பின் புருஷோத்தமனுக்கு,**
**வணக்கம்,**

நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன். பத்துப் பாகங்களாக நீங்கள் எனக்கு எழுதிய தொடர் கடிதம் என் பார்வைக்கு வந்தது. முதலில் என்னைப் பற்றி நீங்கள் தந்த பாராட்டுதல்களுக்கு நன்றிகள். உங்கள் கடிதத்தின் நீட்சி சற்று அதிகரித்து விட்டதாக உணர்ந்தேன். உங்கள் மன எண்ணங்களைக் கொட்ட எனக்கான கடிதத்தைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். எனை விழித்து இக்கடிதம் எழுதப்பட்டிருந்தாலும், அது எனக்கான கடிதமல்ல என்பதை விளங்கிக் கொள்கிறேன். அவலை நினைத்து உரலை இடித்த கதைதான் இது. அக் கடிதத்தில் தெரிந்த உங்களின் பத்திரிகையாளக் கெட்டித்தனத்தை மட்டுமே என்னால் ரசிக்க முடிந்தது. உங்கள் கடிதத்தில் பதிவான விடயங்கள் பற்றி விபரித்து எழுத நான் விரும்பவில்லை. நேரமின்மை அதற்கான ஒரு காரணம்! பிழை என்று தெரிந்தே பொய்மையை வளர்க்க நினைக்கும் உங்களுக்கு, பதில் வரைவதால் என்ன பயன் விளையப்போகிறது என்பது மறுகாரணம்! ஆனாலும் என் மதிப்புக்குரியவர் தாங்கள் என்பதாலும், உங்கள் கடிதம் பத்திரிகையில் வெளிவந்ததாலும், என் நிலைப்பாட்டை மக்கள் மன்றின் முன் அறியத் தரவேண்டியிருக்கிறது.

மக்களை எழுத்தின் மூலம் திருத்திவிடலாம் என்ற நம்பிக்கை, மெல்ல மெல்ல என்னை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. அதிக நேரம் செலவழித்து நான் எழுதிய அரசியல் கட்டுரைகள், மக்கள் மத்தியிலோ தலைவர்கள் மத்தியிலோ, பெரிய மாற்றங்கள் எதனையும் விளைவிக்கவில்லை. உண்மைகளை நிரூபணத்தோடு நான் எழுதியும், அவ் உண்மைகளை உணர மறுத்து, தாம் தாம் பிடித்த முயல்களுக்கு மூன்று கால்களே என, அனைவரும் பிடிவாதம் பிடித்து நிற்பதைக் காண சலிப்புத் தோன்றுகிறது. இன்னும் எம் இனத்திற்கான இடர் முடியவில்லை என்று உணர்வதால்தான், அண்மைக்காலமாக எனது அரசியல் எழுத்துக்களை நான் குறைத்துக்கொண்டேன். உங்கள் கடிதமும் எனது மேற்கருத்தை உறுதி செய்வதாக அமைந்தது துரதிர்ஷ்டமே.

சுமந்திரனையும், தமிழரசுக்கட்சியையும் தாழ்த்துவதும், முன்னாள் முதலமைச்சரை அவர் தகுதிக்கு அதிகமாக உயர்த்துவதுமே, உங்கள் நீண்ட எழுத்தின் நோக்கமாக இருந்தது. முன்பு பலதரம் சொன்ன ஒன்றையே இவ்விடத்தில் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நான் சுமந்திரனதோ, தமிழரசுக் கட்சியினதோ ஆதரவாளனும் அல்லன். முதலமைச்சரின் எதிரியும் அல்லன். இனத்தின் உயர்வே என் நோக்கம். அதற்காக இருசாராரையும் நான் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். எனது முன்னைக் கட்டுரைகளைப் படித்தீர்களேயானால், இவ் உண்மை உங்களுக்குப் புலனாகும். முதலமைச்சர் மீதான விமர்சனங்களில் இருக்கும் கடுமை, மற்றையவர்கள் மீதான விமர்சனங்களில் இல்லை என்பீர்கள். உண்மைதான்! நான், அவரை சற்றுக் கடுமையாக விமர்சிப்பதற்குக் காரணம். முதலமைச்சரது பிழையான நடைமுறைகளும், தன் முன்னேற்றத்திற்காக இனத்தை பின்னோக்கி நகர்த்த முனையும் செயற்பாடுகளுமேயாம்.

நீண்ட தர்மத்தையும் நீதியையும் பேசுகின்ற உங்களிடம், ஒன்றைக் கேட்க மனம் விரும்புகிறது. இயக்கங்களை விமர்சிக்கத் தவறியமையே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று என்று, நீங்களே எழுதியிருக்கிறீர்கள். ஒரு நேர்மையுள்ள பத்திரிகையாளனாக, ஒரு நாளாவது முன்னாள் முதலமைச்சரைக் கடுமையாய் நீங்கள் விமர்சித்திருக்கிறீர்களா? இல்லையென்பதே பதிலாகிறது. அப்படியானால் முதலமைச்சர் எந்தத் தவறும் செய்யவில்லையா? நானே அவரது குற்றங்கள் பலவற்றை வரிசைப்படுத்தி உங்களுக்கே கடிதம் எழுதியிருக்கிறேன். அதைத்தான் விடுங்கள். அவரோடு உடனிருந்த அமைச்சர்கள், அதிகாரிகள் தொடக்கம் நீதிமன்றம் வரை, தொடர்ந்து அவரது பிழைகளைக் கண்டித்து வரும் நிலையில், அவரில் ஒரு பிழைகூட உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உங்களின் நேர்மையை நான் ஐயுற வேண்டியிருக்கிறது.

தமிழரசுக்கட்சியில் சுமந்திரனின் ஆதிக்கம், நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது, ரணிலுக்குத் தமிழரசுக்கட்சி செய்த ஆதரவு, இலங்கை அரசுக்கு ஐ.நா.மனித உரிமைகள் சபையில், கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவளித்த, கூட்டமைப்பு பற்றியதான உங்களின் கண்டனம், கலப்பு நீதிமன்றம் பற்றிய அவர்களின் செயற்பாடுகள், சர்வதேச நீதிமன்ற விடயத்தில் சுமந்திரனின் முரண்பாடு, மைத்திரி பற்றிய மிக உயர்ந்த உங்களின் நற்சான்றுப் பதிவுகள், தமிழரசுக்கட்சியின் சரியான செயற்பாடுகளையும் பிழையாக்கும் உங்கள் விமர்சனம், முன்னாள் முதலமைச்சரின் பிழையான செயற்பாடுகளையும் சரியாக்கும் உங்கள் வியாக்கியானம் என, பலவிடயங்களையும் உங்கள் கடிதத்தில் அள்ளித் தெளிந்திருந்தீர்கள். அக்கடிதத்தின் இடையிடையே நீங்கள் தூவியிருந்த, இலக்கிய மேற்கோள்களை மட்டுமே ரசிக்கமுடிந்தது. மற்றும்படிக்கு, ஒருவரைத் தாழ்த்த வேண்டும் என நினைத்துத் தாழ்த்தியும், மற்றொருவரை உயர்த்த வேண்டும் என நினைத்து உயர்த்தியும், நீங்கள் திட்டமிட்டு எழுதிய எழுத்துக்களில், மக்களை ஏமாற்றும் வஞ்சகமும் பொய்மையுமே அதிகம் தெரிந்தன. ஹிட்லரின் கொடுமைகளைத் தன் வாக்குத்திறனால், திரையிட்டுக் காத்து வந்த “கோயபல்ஸ்” தான் என் நினைவில் வந்தான்.

மற்றவர்களின் பிரச்சினைகள் பற்றி நீங்கள் எழுப்பியிருந்த, கேள்விகள் அனைத்திற்கும் நான் பதில் தரவேண்டிய அவசியமில்லை. கடிதம் எனக்கு எழுதப்பட்டிருந்தாலும், உங்களால் குற்றம் சாட்டப்பட்டவர்களே, அக்கேள்விகளுக்குப் பதில் எழுதவேண்டியவர்களாகின்றனர். பதில் சொல்லமுடியாமல் சமாளிக்கிறேனோ? என நினைப்பீர்கள். நிச்சயம் அப்படியில்லை! உங்கள் கடிதக் கேள்விகளுக்கு எனது முன்னைய அரசியல் கட்டுரைகளில், ஏலவே தெளிவான பதில்கள் வந்துவிட்டன. பதில் சொல்லமுடியாத அளவிலான கேள்விகள் ஏதும் உங்கள் கடிதத்தில் இல்லை. ஆனாலும் உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. காரணம் மற்றவர்களுக்காக நான் பதிலுரைக்கத் தலைப்பட்டால், உங்களைப் போல நானும் நடுவுநிலை என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு, அணிசார்ந்து செயற்படுபவனாகிவிடுவேன். அதனைக் கருதியே தங்களின் குற்றச்சாட்டுகள் பலவற்றிற்கு நான் பதில் உரைக்க விரும்பவில்லை. ஆனாலும் சமூக அரங்கில் ஒருசில விடயங்களை, உங்களோடு நான் பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில், இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் பற்றி, நீங்களும் உங்களைப் போன்ற சிலரும், பிழையான ஒரு கருத்தை மக்கள் மத்தியில் விதைக்கப் பார்க்கிறீர்கள். இக்கால அவகாசத்திற்குத் தமிழரசுக் கட்சி தரும் ஆதரவு, இனத்திற்குச் செய்யும் துரோகம் என்பதாய் நீங்கள் விபரிக்க, அழிவுகளைச் சந்தித்து உணர்ச்சிக் கொதிப்பிலிருக்கும் மக்களும், அதை உண்மை என்று நினைந்து ஏமாறப் பார்க்கிறார்கள். தமிழரசுக்கட்சியை வீழ்த்த உங்களைப் போன்றோரால் முன்வைக்கப்படும் மேற்படி கருத்துக்கள், மக்கள் மத்தியில் ஓரளவு வேலைசெய்யவும் தொடங்கியிருக்கின்றன. உங்களைப் போன்ற உள்நோக்கம் கொண்ட புத்திசாலிகள் ஏமாற்ற நினைத்தால், மக்கள் ஏமாறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதானே. பாவம், கூட்டமைப்பினருக்கும் மக்கள் மன்றில், சரியான முறையில் உண்மையை விளங்கப்படுத்தி, மக்களை வழிப்படுத்தும் ஆற்றலும் இருப்பதாய்த் தெரியவில்லை. தம்மைப் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு பதில் உரைப்பதில், அவர்கள் காட்டும் அலட்சியம் இன்னொரு ஆச்சரியம்!

நீங்கள் இருவரும் என்னவும் செய்துவிட்டுப் போங்கள். மக்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதுக்காய், நான் அறிந்த சில விடயங்களை இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

2006 ஆம் ஆண்டளவில் தொடக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபை, 47 நாடுகளை சுழற்சி முறையில் உட்கொண்டு நிற்கிறது. ஆபிரிக்க நாடுகளுக்கான பிரதிநிதித்துவமாக 13 நாடுகளும், ஆசிய பசுபிக் நாடுகளுக்கான பிரதிநிதித்துவமாக 13 நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான பிரதிநிதித்துவமாக 6 நாடுகளும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கான பிரதிநிதித்துவமாக 7 நாடுகளும், அமெரிக்கக் கண்ட நாடுகளுக்கான பிரதிநிதித்துவமாக 8 நாடுகளும் என, 47 நாடுகளும் இச்சபையில் பகுதிபடுத்தப்பட்டுள்ளன. மேற்படி ஐ.நா. மனிதஉரிமைகள் சபையை, நாம் நினைக்கும் அளவிற்கான வலிமை பெற்ற ஒருசபையாய்க் கருதவும் முடியாதென்பது வேறு விடயம். அதற்கு உதாரணமாய் ஒன்றைச் சொல்லலாம். 2006 முதல் 2015 வரை இச்சபையில், இஸ்ரேலுக்கு எதிராக 62 தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அத்தீர்மானங்களில் ஒன்றைக் கூட இஸ்ரேல் அமுல்படுத்தவில்லை. அப்படியிருந்தும் இஸ்ரேலை இச்சபையால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் இச்சபையின் பலத்தின் யதார்த்தம்.

ஆரம்பித்த நாள் முதல், வருடத்தில் மார்ச், ஜூன், செப்டெம்பர் ஆகிய மாதங்களில், மூன்று கூட்டங்களை நடத்துவதை இச்சபை வழக்கமாய்க் கொண்டிருக்கிறது. அவசிய தேவை ஏற்படும் பட்சத்தில், விஷேட கூட்டங்களையும் இச்சபை நடத்தும். இக்கூட்டங்களின் நிறைவில் ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர், சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் பற்றிய, தனது அறிக்கையைச் சமர்ப்பித்து வருகிறார்.


இச்சபையில் 2014 மார்ச் கூட்டத்தில், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 5 நாடுகள் இணைந்து, இலங்கைக்கு எதிராக பாரதூரமான பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தன. இப்பிரேரணைக்கு ஆதரவாக 23 நாடுகளும், எதிராக 12 நாடுகளும் வாக்களித்தன. 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்தன. வாக்களிக்கத் தவறிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் மீது செலுத்தப்படும் கடுமையான அழுத்தம், அங்குள்ள பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கச் செய்துவிடலாம் என்று, தான் கலந்து கொள்ளாததற்கான காரணத்தை அப்போது இந்தியா சொல்லியது. பெரும்பான்மை பலத்தோடு நிறைவேற்றப்பட்ட இப்பிரேரணை, போரின் பின் மகிந்தவினால் அமைக்கப்பட்டு, மகிந்தவை பெரும் சங்கடத்திற்கு ஆளாக்கிய “கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணத்திற்கான ஆணைக் குழுவின்” சிபாரிசுகளை ஏற்று, சுயாதீனமானதும் நம்பிக்கையானதுமான விசாரணையை மேற் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது. இப்பிரேரணையால் உலக அளவில் ஏற்பட்டிருந்த நெருக்கடியை, சமாளிக்க வேண்டிய நிலைமை இலங்கைக்கு. இந்நிலையில் இங்கு யாரும் எதிர்பாராத வண்ணம் ஆட்சி மாற்றம் நிகழ, தமிழர்களின் ஆதரவையும் பெற்று ஆட்சி அமைத்தவர்கள், 2015 செப்டெம்பர் மாதக் கூட்டத்தில் அமெரிக்காவுடன் இணைந்து, இலங்கைப் பிரச்சினை சம்பந்தமான ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தனர்.

இலங்கையும் இணை அனுசரணை வழங்கிய இப்பிரேரணைக்கு, வேறு 8 நாடுகளும் அனுசரணை வழங்க முன்வந்தன. மேற்படி கூட்டத்தொடரில், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, யுத்தக்குற்றம், நீதி பொறிமுறை என, பல விடயங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. ஆனால் இரண்டாண்டுகள் கழித்து நடந்த கூட்டத்தில், இப்பிரேரணை சம்பந்தமான எந்தவித முன்னேற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத இலங்கை அரசு, அவற்றை நடைமுறைப்படுத்த மேலும் இரண்டாண்டுகள் அவகாசம் கோரி பெற்றுக்கொண்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் சோகம்! எதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலும் இரத்தக்கறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதந்திகளை நம்பி

# உணர்ச்சிவசப்பட்டு செயற்பட வேண்டாம்

### மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த பாரிய துன்பியல் சம்பவத்தையிட்டு நான் மிகவும் வருத்தமடையும் அதேவேளை, இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்பாராத இச்சம்பவத்தால் என்னைப் போன்றே ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் ஆளாகி இருக்கின்றீர்கள் என்பதை நான் அறிவேன்.

இச்சம்பவத்தின் பின்னால் இருக்கும் சூழ்ச்சி என்ன என்பதை ஆராய்வதற்காக பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, விசேட அதிரடிப் படையினர், இராணுவம், வான்படை, கடற்படை, உள்ளிட்ட பாதுகாப்புத் துறைக்கு பணிப்புரை வழங்கப்பட்டு அவர்கள் அது சம்பந்தமாக துரித விசாரணைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகையால் அவ்விசாரணைகளுக்கு ஒட்டுமொத்த நாட்டு மக்களும் தமது பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்குமாறு அரசாங்கம் கேட்டுக் கொள்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சிக்கும் துயரத்திற்கும் ஆளாகியிருக்கும் பின்னணியில் அனைவரினதும் ஒத்துழைப்பே மிக முக்கியமாக தேவைப்படுகின்றது என்பதை அரசாங் கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு நாட்டு மக்கள் என்ற வகையில் அனைவரும் அமைதி காக்கும் அதேவேளை, வதந்திகளை நம்பி உணர்ச்சிவசப்பட்டு செயற்பட



வேண்டாம் என்றும் நாட்டு மக்களை கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு நிலைமையை பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கும் நடந்த சம்பவத்தின் பின்னணியைக் கண்டறிவதற்கும் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது என்பதையும் நாட்டு மக்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உயிர்நீத்த மக்களுக்காக இருண்டது ஈபிள் கோபுரம்



உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு, இலங்கையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு நாளான நேற்று முன்தினம் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளில் 200 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்த மக்களுக்கு உலகெங்கும் இருந்து அனுதாபங்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பாரிஸ் ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன. இதுதொடர்பாக ஈபிள் கோபுரத்தின் டுவிட்டர் பக்கத்திலும் பதிவு ஒன்று இடப்பட்டுள்ளது. (இ-7)

# அமைச்சர் ரவி, ஆளுநர் அசாத்சாலி மட்டு.விஜயம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 78 பேருக்கு தேவையான வளங்களைப் பெற்றுக் கொண்டு விரைந்து சிகிச்சையளிக்குமாறும் வைத்தியசாலை பணிப்பாளருக்கு அமைச்சர் ரவிகருணாநாயக்க, ஆளுநர் அசாத்சாலி ஆகியோர் நேரில் சென்று பணிப்புரை வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பில் சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை பார்வையிடுவதற்காக அமைச்சர் ரவிகருணாநாயக்க, மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலி ஆகியோர் சென்றனர்.

வெடிச்சம்பவம் இடம்பெற்ற தேவாலயத்தை பார்வையிட்டு படையினரிடம் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட பின்னர் காயமடைந்தவர்களின் நிலைமை தொடர்பில் ஆராயும் பொருட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது காயடைந்தவர்களின் சிகிச்சை முன்னேற்றம் மற்றும் காயமடைந்தவர்களின் நிலைமை தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சிகிச்சையை விரைவாக வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதன் பொருட்டு வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுமாயின் பற்றாக்குறையாகக் காணப்படும் வளங்களைப் பெற்றுக் கொண்டு விரைவாக சிக்கிச்சை நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முக்தி

ஒரு துறவி இருந்தார். பலர் அவரிடம் வந்து உபதேசம் கேட்பது வழக்கம். வருபவர்கள் எல்லோருக்கும் அவர் அறிவுரை சொல்லுவார், ஆறுதல் சொல்லுவார். அப்படிப்பட்ட அந்த துறவியிடம் அறிவுரை கேட்பதற்கு ஒருநாள் ஒரு ஆசாமி வந்தான். வந்த ஆசாமி ஒரு வடிகட்டிய முட்டாள். மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழக்கப்படாதவன். அப்படி இருந்தும் அவனுக்கு ஒரு ஆசை. என்ன தெரியுமா?

முக்தி கிடைக்க வேண்டுமாம்! அதுக்கு என்ன வழி எனத் தெரிந்து கொள்வதற்குத்தான் துறவியைத் தேடி வந்தான். வந்து அவர் முன்னால் நின்றான். சுவாமி நான் முக்தி அடைவதற்கு என்ன வழி என்று சொல்லுங்களேன் என்றான். துறவி பொறுமையாகப் பதில் சொன்னார். இதோ பாருப்பா! நீ முக்தியடைய வேண்டும் என்றால் மகான்களும் சாஸ்திரங்களும் காட்டிய தார்மீக நெறிகளைப் பின்பற்ற வேண்டும். ஏழை எளியவர்கள், யாருமில்லாதவர்கள் இவர்களுக்கெல்லாம் உதவ வேண்டும் என்றார்.

அவன் யோசித்துப் பார்த்தான். இந்தத் துறவி சொன்னபடி நடந்தால் தான் நமக்கு முக்தி கிடைக்கும் போல இருக்கு! ஆனால் அதற்கு நிறைய செலவாகும் போல இருக்கே! செலவு செய்தால் என்னிடமுள்ள செல்வமெல்லாம் கரைந்து போய் விடுமே என்ன செய்வது? சரி இவர் சொன்ன உபதேசத்தை ஏற்க முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்பற்றுவோம். அந்த அளவுக்கு முக்தி கிடைத்தால் போதும்! என முடிவு செய்தான். அதன் பிரகாரம் நடக்க ஆரம்பித்தான். தினமும் ஒரு பிடி அரிசி அளவாக எடுத்து அதை யாராவது தானமாய் கேட்டால் கொடுத்து விடுவான். அவ்வளவுதான். இப்படிச் செய்து கொண்டு இருந்தான்.

கொஞ்ச நாட்களின் பின் அந்தத் துறவியைப் போய்ப் பார்த்தான். என்னப்பா நான் சொன்ன மாதிரி தானம் செய்துவிட்டுத்தான் வருகின்றாயா? என்று கேட்டார் துறவி. ஆமாம் சுவாமி தினமும் தவறாமல் ஒருபிடி அரிசியைத் தானம் செய்து கொண்டு வருகின்றேன் என்றான் மிகவும் பெருமையாக!

துறவி இதைக் கேட்டிட்டு ரொம்பப் பாராட்டப் போகின்றார் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார். அந்தச் சமயத்தில் அவர் ஒரு மரத்திற்கு அடியில் உட்கார்ந்திருந்தார். அந்த மரத்தின் அடிப்பாகத்தில் தனது விரல் நகத்தினாலே கீற ஆரம்பித்தார். அந்த ஆள் என்ன துறவி வாயைத்திறக்கவில்லை எனப் பார்த்துக் கொண்டு நின்றான்.

என்ன சுவாமி நான் என்னுடைய தானத்தைப்பற்றி சொன்னேன். நீங்க அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மரத்தைக் கீறிக்கொண்டு இருக்கின்றீர்களே! என்றான்.

ஒன்றுமில்லை நான் நகத்தாலே இந்த மரத்தை வெட்டிக் கொண்டிருக்கின்றேன். நீ கொஞ்ச நேரம் சும்மா இரு என்றார். இவனுக்கு அதைக் கேட்டதும் சிரிப்பு வந்துவிட்டது. என்னங்க இது? கை நகத்தாலே இவ்வளவு பெரிய மரத்தை வெட்ட முடியுமா? கோடரியாலே செய்ய வேண்டிய ஒரு காரியத்தை உங்களாலே எப்படி நகத்தாலே செய்ய முடியும் என்றான்!

ஒரு பிடி அரிசியைக் கொடுத்துவிட்டு நீ மோட்சத்துக்குப் போக வேண்டும் என்று நினைக்கும் போது, நான் என்னுடைய விரல் நகத்தாலே இவ்வளவு பெரிய மரத்தை வெட்ட வேண்டும் என்று நினைக்கக் கூடாதா? என்றார் துறவி. துறவி இப்படிக் கேட்டதும் தான் அந்த ஆளுக்கு தான் செய்த தவறு புரிந்ததாம். அதன் பிறகுதான் ஒரு தெளிவு உண்டானதாம்!

முக்தியடைவது என்றால் சாதாரண விடயமா? முக்தி ஸ்தலங்களிலே சிலது சொல்லுவார்களே தெரியுமா? திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தை தரித்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி. காசியிலே இறந்தால் முக்தி என்பார்கள். அந்த இடங்களின் மகிமையைப் புரிந்து கொள்வதற்காக இப்படிச்சொல்வார்கள்.

மேலோகத்தில் முக்தியடைந்த ஐந்து பேர் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கேட்டுக் கொண்டார்கள். நீங்கள் எப்படி இங்கே வந்து சேர்ந்தீர்கள் என்று கேட்டார்கள்.

ஒருத்தர் நான் திருவாரூரிலே பிறந்தேன்! என்றார். இன்னொருத்தர் நான் சிதம்பரத்தை தரிசித்தேன் என்றார். அடுத்தவர் நான் திருவண்ணாமலையை நினைத்தேன் என்றார். நான்காவது ஆள் நான் காசியிலே இறந்தேன் என்றார். ஐந்தாவது ஆள் பேசாமல் நின்றுகொண்டிருந்தார். என்ன பேசாமல் நின்று கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எப்படி முக்தி கிடைத்தது எனச் சொல்லுங்கள் என்று மற்ற நான்கு பேரும் கேட்டார்கள். இவர் மெதுவாக வாயைத் திறந்து நான் மவுண்ட் வீதியைக் கடந்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் குண்டு வெடிப்பு

# குற்றவாளிகளைக் கண்டறிய தேசிய நடவடிக்கை மையம்

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட சகல துறைகளினதும் தலைமை அதிகாரிகளின் பங்குபற்றலில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது பொலிஸார், முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை கடமையில் அமர்த்தி மத வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலா விடுதிகள், வைத்தியசாலைகள், தூதரகங்கள், கத்தோலிக்க வணக்கஸ்தலங்கள் மற்றும் முக்கியத்துவமிக்க அரச நிறுவனங்கள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பதவிநிலை பிரதானிகளின் ஆலோசனைகளுக்கமைய இச்சம்பவம் பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் குற்றவாளிகளைக் கண்டறிவதற்குமான சோதனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் தேசிய நடவடிக்கை மையம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், இத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாகியவர்களுக்கு துரித சிகிச்சையளிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதுடன், மரண விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கும் நீதித்துறை உத்தியோகத்தர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இச்சம்பவங்களால் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளை அரச செலவில் மேற்கொள்ளவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் பாதுகாப்பு தரப்பினரால் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சமூக ஊடகங்களில் தவறான செய்திகள் பகிரப்படுவதால் விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையும் வரை தற்காலிகமாக அனைத்து சமூக ஊடகங்களின் செயற்பாடுகளையும் முடக்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அனைத்துப் பிரதேசங்களினதும் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மக்கள் தமது இல்லங்களில் அமைதியாகவும் சமாதானத்தை நிலைநாட்டும் வகையிலும் இருப்பதன் மூலம் பாதுகாப்புப் துறையினருக்குத் தேவையான ஒத்துழைப்புகளை நல்குமாறும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்களின் பாதுகாப்பிற்காக முப்படையினர் சேவையில் அமர்த்தப்பட்டிருப்பதுடன், பொலிஸ் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் முப்படையினர் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வர் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## பிதாவே இவர்களை மன்னியும்

# இலங்கையில் நடந்த குண்டு வெடிப்பின் கொடுமையை உணர்த்தும் புகைப்படம்

(கொழும்பு)

இலங்கையில் 8 இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் 250 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதுடன் 450 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம், ஷங்கிரில்லா நட்சத்திர ஹோட்டலின் மூன்றாவது மாடி, சினமன் கிரான்ட், கிங்ஸ்பெரி நட்சத்திர ஹோட்டல் தெஹிவளை மற்றும் தெமட்டைகொடை ஆகிய 8 இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இயேசுவின் சிலை மீது இரத்தம் படிந்திருக்கும் புகைப்படம் தற்போது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது டுவிட்டர்பக்கத்தில்ஒரு புகைப்படத்தை பதிவிட்டுள்ளார்.

Raghu B
@JBRBALA
Follow

On a #Eastersunday "Father, forgive them, for they do not know what they do." A powerful image of the #risenchrist #EasterSundayAttacksLK



தேவாலயத்தில் குண்டுவெடிப்பு நடந்தபோது அதில் காயமடைந்தவர்கள் மற்றும் இறந்து போனவர்களின் இரத்தம் அங்கிருந்த இயேசு நாதரின் சிலையில் தெறித்துள்ளது.

"பிதாவே, இவர்களை மன்னியும்" தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் என்ற வார்த்தைகள் இயேசு நாதரை சிலுவையில் அறைந்தபோது அவர் சொன்ன வார்த்தைகள்....!

குறித்த புகைப்படத்திற்கும் அந்த வார்த்தைகள் பொருந்துவதாக சமூக வலைத்தளங்களில் பரவலாக கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவசரத் தகவல்களை அறிவதற்கு 24 மணிநேர சேவை இலக்கங்கள்

(கொழும்பு)

அவசரத் தகவல்களை அறிந்து கொள்வதற்காக, 24 மணி நேர சேவையைக் கொண்ட இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

011 302 4873, 011 302 4883 மற்றும் 011 201 3039 ஆகிய இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, வெளிநாட்டவர்கள் குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ள 011 232 3015 என்ற இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பிரசித்தமான இடங்களைத் தவிர்க்கவும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க பிரஜைகளுக்கு அந்த நாட்டு அரசாங்கம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சன நெருக்கடி நிறைந்த இடங்கள், பிரபலமான இடங்கள், வழிபாட்டுத் தலங்கள், பிரசித்தமான ஹோட்டல்கள் மற்றும் பூங்காக்களில் இருப்பதை தவிர்க்குமாறு அமெரிக்கா தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பு உட்பட 8 இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு தாக்குதல்களை கவனத்தில் கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா மட்டுமல்லாது பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளும் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன. (இ-7)

# மரண பரிசோதனை நடவடிக்கைகளை துரிதமாக்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் உயிரிழந்தவர்களின் மரண பரிசோதனை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு திடீர் மரண விசாரணை அதிகாரிகளிடம் கோரியுள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்களை [illegible] திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தற்காலிகமாக மூடப்பட்ட கொழும்பு ஆடம்பர விடுதிகள்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, கொழும்பில் உள்ள பல ஐந்து நட்சத்திர ஆடம்பர விடுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கொழும்பு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிங்ஸ்பெரி, சினமன் கிரான்ட், ஷங்ரி-லா விடுதிகள் உள்ளிட்ட 8 இடங்களில் நேற்று முன்தினம் குண்டுகள் வெடித்திருந்தன.

இந்தக் குண்டுவெடிப்புகளால் மேற்படி விடுதிகளுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டதுடன் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, கொழும்பு நகரில் உள்ள பல ஐந்து நட்சத்திர விடுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டன. பெரும்பாலான விடுதிகளின் முன்பாக ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

### புதியவர்களுக்கு அனுமதியில்லை

நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை, புதிய விருந்தினர்களை விடுதிகளில் அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தற்காலிகமாக மூடப்பட்ட விடுதிகளின் முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதிகளில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புக்களில் சில தற்கொலைக் குண்டுதாரிகளால் மேற்கொள்ளப்பட்டன என்றும், குண்டுதாரிகள் அந்த விடுதிகளில் தங்கியிருந்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளதை அடுத்தே, இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

### மூன்று விடுதிகளிலும் ஒருவரே முன்பதிவு

கொழும்பில் குண்டுகள் வெடித்த மூன்று விடுதிகளிலும் ஒருவரே அறைகளை முன் பதிவு செய்திருப்பது தெரியவந்துள்ளது. அவர் ஒரே பெயரில், ஒரே அடையாள அட்டையைப் பயன்படுத்தியே விடுதிகளில் தங்குவதற்கு அறைகளை வாடகைக்கு எடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் நடத்திய கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

முகமட் அஸ்ஸம் முகமட் என்பவரே அறையை பதிவு செய்திருப்பதாக குண்டுவெடித்த ஒரு விடுதி தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

08



**18. மண் வள பாதுகாப்புச் சட்டம்** (Soil conservation Act)

> இயற்கை நமக்களித்த இணையற்ற வளங்களில் ஒன்றான மண் வளத்தை பொறுத்தே மனித சமுதாயத்தின் வாழ்வும், மறைவும் அமைந்துள்ளது. அனைத்து உயிரினங்களும் மண்ணைச் சார்ந்தே வாழ்கின்றன. மண் வளம், மண் நலம் மற்றும் அதன் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் "சர்வதேச மண் அறிவியல் கூட்டமைப்பு 2012 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் டிசெம்பர் 5 ஆம் திகதி "மண் வள நாள்" கொண்டா டப்படுகிறது.

இயற்கை நமக்களித்த இணையற்ற வளங்களில் ஒன்றான மண் வளத்தை பொறுத்தே மனித சமுதாயத்தின் வாழ்வும், மறைவும் அமைந்துள்ளது. அனைத்து உயிரினங்களும் மண்ணைச் சார்ந்தே வாழ்கின்றன. மண்ணின்றி வாழ்வில்லை;வாழ்வின்றி மண்ணில்லை என்பார்கள். உலகளவில் மண் வளம், மண் நலம் மற்றும் அதன் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேச மண் அறிவியல் கூட்டமைப்பு 2012ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் டிசெம்பர் 5 ஆம் திகதி "மண் வள நாள்" கொண்டாடப்ப டும் என அறிவிப்பு செய்து வளமான மண்ணின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து. நீடித்த நிலையான மண்வள மேம்பாட்டு முறைகளை பின்பற்றிட வேண்டும். என வலியுறுத்துகின்றது.

**1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு கட்டளை சட்டம்**

1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு கட்டளை சட்டம், மண்ணின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல், மண் அரிப்பைக் குறைத்தல், பாதுகாத்தல், மண் அரிப்பிலிருந்து நிலத்தை மீட்டெடுத்தல். நிலத்தை வெள்ளம், உப்புத்தன்மை, காரத்தன்மை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டம் ஆகும். 1951ஆம் ஆண்டு இல. 25 மூலம் நடைமுறைக்கு வந்த இச் சட்டம் 1953, 1981 மற்றும் 1996 களில் திருத்தம் செய்யப்பட்டது. இதன் கீழ் நிறுவப்பட்டுள்ள மண்வளம் பேணல் சபை மிகவும் வினைத்திறன் அற்று இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணங்களின் போது மலைகளில் ஏற்படும் மண்சரிவை தவிர்ப்பதற்காக பாவிக்கப்படும் தொழில்நுட்பத்திலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அது தொடர்பான எதிர்கால திட்டமிடலின் போது மண்ணரிப்பை தடுப்பதற்கு முதன்மை கவனம் செலுத்தி திட்டங்களை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

அனுமதியற்ற மணல் மற்றும் மண் கடத்தல் காரணமாக கங்கைகள் மற்றும் ஆற்றங்கரைகளில் ஏற்படும் மண்ணரிப்பு காரணமாக நீர்மூலங்கள் தடைப்பட்டுள்ள மோசமான நிலை தொடர்பிலும் அலுவலர்களின் கவனத்தை ஈர்த்த ஜனாதிபதி அந்த நிலையை தவிர்ப்பதற்காக சட்டத்தை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

மத்திய மலைநாட்டில் மட்டுமன்றி நாடு முழுவதும் மண்ணரிப்பை தடுப்பதற்கான திட்டங்களை வினைத்திறனாக அமுல்படுத்துமாறும், சட்ட அதிகாரங்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான சுற்றறிக்கைகளை அனுப்புமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை தெரிவித்தார்.

> மண் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் பிரிவு 3இன் பிரகாரம் மண்வளப் பாதுகாப்பு பாதிக்கப்படும் என அறியப்படும் எந்தவொரு பிரதேசத்தையும் மண் வளப் பாதுகாப்பு பிரதேசமாக அந்த விடயம் சம்பந்தமான அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யமுடியும்.

மண் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் பிரிவு 3இன் பிரகாரம் மண்வளப் பாதுகாப்பு பாதிக்கப்படும் என அறியப்படும் எந்தவொரு பிரதேசத்தையும் மண் வளப் பாதுகாப்பு பிரதேசமாக அந்த விடயம் சம்பந்தமான அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்ய முடியும். அமைச்சர் மேலும் இப் பிரதேசங்களுக்கு அல்லது விசேட தெரிவு செய்யப்பட்ட மண் பாதுகாப்பு பிரதேசங்களுக்கு குறித்த நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.

மண்வளப் பாதுகாப்பு பாதிக்கப்படும் என அறியப்படும் எந்தவொரு பிரதேசத்தையும் காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் மூலம் அரசு பொறுப்பேற்க முடியும்.

நாட்டின் 10 நிர்வாக மாவட்டங்களுக்கு உட்பட்ட 13,000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 20% ஆகும். இவை பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களாகும். இதில் இரத்தினபுரியில் 34% நிலப்பரப்பு மண்சரிவு அபாய பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. கேகாலையில் 36% நிலப்பரப்பும், 27% நிலப்பரப்பு கண்டியிலும், நுவரெலியாவில் 22% நிலப்பரப்பிலும் மண் சரிவு அபாயம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதாக கட்டட ஆராய்ச்சி மத்திய நிலையம் அறிவித்திருக்கிறது.

**19. தெங்கு அபிவிருத்தி சட்டம் - 2003ன் இல.40.** (Coconut Development Act)

தெங்கு அபிவிருத்தி சட்டம் தெங்கு தொழிற்றுறையின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறையையும் தென்னந் தோட்டக்காணிகளை பராமரித்தல், நிலங்களைப் பயன்படுத்துதல், சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுதல், தென்னந் தோட்டங்களை நிர்வகித்தல் மற்றும் கையகப்படுத்துதல் (vesting) என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சட்டமாகும். இச் சட்டம் முதன் முதலில் 1971இல் (1971இன் இல. 46) உருவாக்கப்பட்டது. இது 1975இல் தெங்கு அபிவிருத்தி சட்டம் இல.24 மூலம் திருத்தப்பட்டது.

**இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கையில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை என்பது 1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட முதன்மை அமைப்பாகும். இலங்கையில் தெங்கு கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை வகிக்கின்ற அது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

> தெங்கு அபிவிருத்தி சட்டம் தென்னந் தோட்டங்களை நிர்வகித்தல் மற்றும் கையகப்படுத்துதல் (vesting) என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சட்டமாகும்.

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் தென்னையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றவர்களுக்கு வெளிநாட்டு கொள்வனவாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் வசதிகளைச் செய்து கொடுக்கிறது. மேலும் இந்த இணையத்தளம் அதிகாரசபையின் பணிகளையும் அது வழங்குகின்ற சேவைகள்ளயும் இலாபகரமான வர்த்தக நிகழ்வுகள் பற்றிய தகவல்களையும் ஏனைய சம்பந்தப்பட்ட தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் தகவல் தோற்றுவாயாகவும் சேவையாற்றுகிறது.

**தென்னை பயிர்ச்செய்கை சபை**

தேங்காய் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையில் தேங்காய் சாகுபடியை பாதுகாப்பதற்காக தேங்காய் உற்பத்தியாளர்களிடையே தென்னை நடுகை செய்வது எப்படி என்பது பற்றிய தொழில்நுட்ப அறிவை வளர்த்தல். தேங்காய் நிலங்களில் ஊடுபயிர் மற்றும் கால்நடை வளர்ப்பு மூலம் தேங்காய் நில உற்பத்தி மற்றும் வருவாய் உற்பத்தியை அதிகரித்தல். மொத்த உள்நாட்டு உற்பத்தியும், உள்ளூர் தொழிற்றுறை தேவைகளும் தேங்காய் ஏற்றுமதி கோரிக்கையை சந்திக்க மக்களை உயர்த்துதல் சிறியளவிலான தேங்காய் உற்பத்தியாளர்கள் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தேங்காய் சார்ந்த அடிப்படையிலான தொழிற்றுறையை அமைப்பதற்காக சமூக அடிப்படையிலான நிதியியல் சமூகங்களை உருவாக்க வழிவகை செய்தல், வர்த்தக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் தேங்காய் சமுதாயத்தின் மாதிரியை தோட்டக்கலை ஆலைகளுக்கு மேம்படுத்துதல் மற்றும் இலாபகரமான வகையில் அவற்றை நிர்வகிக்கசெய்தல் போன்ற பணிகளை தென்னை பயிர்ச்செய்கை சபை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**20. தேயிலை கட்டுப்பாடு சட்டம் - 1993இன் இல.3** (Tea Control Act.)

தேயிலை கட்டுப்பாடு சட்டம் முதன் முதலில் 1957 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. அதன்பின் அது 7 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டது. கடைசியாக 1993இல் திருத்தம் செய்யப்பட்டது. இச் சட்டம் தேயிலை தோட்டங்கள் மற்றும் அதன் உரிமையாளர்களைப் பதிவு செய்தல், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களால் இயக்கப்படும் தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல், தேயிலை தோட்டங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புகள் மற்றும் இது சம்பந்தமாக ஆணையாளர் வழங்கிய உத்தரவுகளுக்கு இணங்காத போது எடுக்கப்படும் நடவடிக்கைகள், அரசாங்கத்திடம் பதிவு செய்யப்பட்ட பெருந்தோட்டம், பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலை அல்லது பதிவு செய்யப்பட்ட சிறிய பெருந்தோட்டக்காணியை கையளித்தல், பதிவு செய்யப்பட்ட தோட்டங்கள், பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சிறிய பெருந்தோட்டக்காணியை சுவீகரித்தல், தேயிலை செடி நடுகை மற்றும் மீள் நடுகை ஆகியவற்றின் கட்டுப்பாடுகள், தேயிலை ஆலோசனை சபை நிறுவுதல் போன்றவற்றை உள்ளடங்கிய சட்டமாகும்.

> இலங்கையில் தற்சமயம் மொத்தமாக 202,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்படுகின்றது. அதில் 61% தனியாரினதும் 39% அரச துறையையும் சாரும்.

இலங்கையில் தற்சமயம் மொத்தமாக 202,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்படுகின்றது. இத் தேயிலைக் காணிகளை அவை முகாமைத்துவம் செய்யப்படுகின்ற அடிப்படையில் வகைப்படுத்துகின்ற போது தனியார் 61% ஆகவும் அரச துறை 39% ஆகவும் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்தியானது நாட்டின் சில மாவட்டங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதானமாக ஈரவலயப் பிரதேசங்களில் மேற் கொள்ளப்படுகின்றது. அரச காணிகள் பல குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான உயர் மட்டங்களில் இலங்கை தேயிலை உற்பத்தி செய்கின்றது. இவற்றுள் அதிகமானவை தாழ் நிலத்தேயிலையாகும். கடல் மட்டத்திலிருந்து 600 மீற்றர் முதல் மாறுபட்ட உயரங்களில் தேயிலை பயிர் செய்யப்படுகின்றது. இது நல்ல சுவை யும் நிறமும் உடையதாகத் திகழ் கிறது. 1200 மீற்றருக்கு மேற்பட்ட உயர் நிலங்களில் உயர்நிலத் தேயிலை பயிரிடப்படுகிறது. இதன் தரம் மேன்மை மிக்கதாகக் கருதப்படுகிறது. இது தனித்து வமான சுவையும் மணமும் உடையதாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்


228

இந்து சாதனம்

Hindu Organ

செங்கோல் ஓச்சினர்

செந்தமிழ்மன்னர்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

இந்து சமயத்தின் ஒரேயொரு செய்திப்பத்திரிகை

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

அக்காலத்துப் பல்வேறு செய்திப்பத்திரிகைகள் , பொது மேடைப்பேச்சுக்கள், பொதுப் பிரசாரம் இவை சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் என்பன மூலமாகப் பொங்கும் நிலையிலிருந்த அரசியல் நிலைமையை உணரக்கூடியதாக இருந்தது.

இதேவேளை சிங்களத் தேசிய வாத வளர்ச்சி இந்திய குறிப்பாகத் தென்னிந்திய திராவிட இயக்கம், அவர்களது பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான போராட்டம் என்பனவற்றுடன் ஆசியாவிலும் வேறிடங்களிலும் உள்ள விடுதலை இயக்கங்கள் என்பன ஓரளவுக்கு வளரும் தமிழ் அரசியல் அடையாள உணர்வையும் புதிதாக உருவாகி வரும் தேசிய வாதத்தையும் மேலும் பலப்படுத்தின என்பதும் உண்மை.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் அரசியல் அபிலாசைகள் சம்பந்தமான விடயங்கள் பிரதானமாக மோணிங்ஸ்ரார், பேற்றியற், இந்து ஓகன், இலங்காபிமானி போன்ற செய்திப் பத்திரிகைகளிலும் குறிப்பாக அவற்றின் ஆசிரியர் தலையங்கத்திலும் விவாதிக்கப்பட்டன.

இருப்பினும் அநேகமான பத்திரிகைகள் தமிழர் தேசிய வாதத்தைவிட இலங்கைத் தேசியவாதத்தின் பிரச்சினைகளிலேயே கவனம் செலுத்தின. இந்து ஓகனும் அதன் தமிழ்ப் பதிப்பாகிய இந்து சாதனமும் மாத்திரமே தமிழ் அரசியல் அபிலாசைகள் சம்பந்தமான கட்டுரைகளையும் கூற்றுக்களையும் இடைவிடாது பிரசுரித்தன.

இவை தமிழ்ச் சமூகத்தை தேசாபிமான உணர்ச்சியைத் தழுவக்கோரி வெளிப்படையாக உற்சாகமளித்தன. இதற்குப் பிந்திய வருடங்களில் (1922 இலிருந்து) தேசாபிமானி பத்திரிகையும் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தியது. ஒரு சில உதாரணங்களை இங்கு தருவது பொருத்தமாகும்.

1889 இன் இந்து ஓகன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் தேசாபிமானம் எனும் தலைப்பின் கீழ் ஒரு சமூகமானது சுயமரியாதை கொண்டதாயும் தான் பிறந்து வளர்ந்த இடங்களின் மேல் அன்பு கொண்டதாயும் இருத்தல் அவசியம் எனப் பின்வரும் வகையில் வாதிட்டிருந்தது.

ஒரு குறிப்பிட்ட நாட்டில் பிறந்து வளர்ந்து அந்நாட்டின் பண்புகளுக்கு ஆட்பட்டிருக்கும் ஒருவர் அந்த நாட்டின் மேல் தேசாபிமானம் கொண்டிருத்தல் வேண்டும் என்பது அவசியம். அத்தகைய தேசாபிமானம் இல்லாதுவிடின் அந்த நாடு பாதுகாப்பிழந்து பாழ்பட்டு விடும்.

எமது இல்லத்தை நாம் நாளும் பேணி தேவையேற்படும் போது திருத்தங்களை மேற்கொள்ளாதுவிடின் அது எவ்வாறு சிதைவடையுமோ அவ்வாறேதான் [illegible] தருணத்தில் அதன் பாதுகாப்புக்கு அவசியமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதுவிடின் அழிந்து போம்.

பத்திரிகை ஆசிரியரின் மேற்படி கூற்றை நாம் ஊன்றிக் கவனிப்போமாயின் தனது தேசியப் பண்பைப் பேணிப்பாதுகாப்பது தமிழ்ச் சமூகத்தின் தலையாய கடமை என்பதை அது குறிப்புணர்த்துவது புரியும்.

மேலோட்டமாகப் பார்க்கையில் அது ஒரு பொதுவான கூற்றாக தேசியம் அல்லது பிரதேச வாரிப் பிரதேசம் என்ற கருத்தை முன்வைக்காது முழு இலங்கைக்கான தேசியத்தையே ஆசிரியர் குறிக்கின்றார் என்ற முடிவுக்கு எம்மால் வர இயலும். [illegible] அன்றைய அரசியல் நிகழ்வுகளையும் இலங்கைத் தமிழர் மத்தியில் நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கு எடுக்கையில் ஆசிரியர் முழு இலங்கையையும் கருதினார் என முடிவு செய்வது தவறாகும். இதற்கு மாறாக தமிழ்த் தேசியம் என்ற கருத்தாக்கமே அவரது நோக்கமாகவுள்ளது.

தமிழ்மொழியை வாசித்து எழுத புரிந்து கொள்ளக்கூடிய தமிழரை இவ்வகையான தேசாபிமான உணர்வு தட்டியெழுப்பியது என்று கூறுவதில் தவறில்லை. அரசியல் சுதந்திரம் அடைவதற்கு அவை அவர்களை ஊக்குவித்தது.

இதே ஆசிரியர் தலையங்கம் அரசியல் அந்தஸ்து அதிகமாக அபிவிருத்தியடைந்த வேறு நாடுகளை குறிப்பிட்டுத் தொடர்ந்தது.

ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜேர்மனியர், அமெரிக்கர், ஜப்பானியர் மேலும் பல வேறு நாட்டவர்கள் தமது நாடுகளைத் தமது சொந்தவீடு போலப் பாவிக்கின்றனர். இதன் பெறுபேறாக அந்த நாடுகள் கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயம், போர்க்கலை என்பவற்றில் விருத்தியும் உன்னதமும் அடைந்திருப்பதுடன் வீரம், ஆண்மை, சாதனைகள், செல்வம் ஆகியவற்றை வெளிக்காட்டியதுடன் அரசாட்சி செய்வதிலும் நாகரிகத்திலும் ஏனைய விடயங்களிலும் தமது உயர் திறனைக் காட்டியுள்ளனர்.

எமது தேசத்தவர்க்கு தேசாபிமானம் இல்லை. இதனால் எமது நாடு ஏனைய நாடுகளை விடக் கீழ்நிலையை அடைந்தது. இந்த நிலைமையைச் சீர்திருத்த நாம் யாவரும் ஒன்றிணைந்து பாடுபடல் வேண்டும்.

இவ்வகையான கருத்துக்கள் வாசிக்கும் திறன்கொண்ட தமிழரை உசுப்பி அவர்களை ஓரளவுக்கேனும் தேசிய ரீதியில் சிந்திக்க நிச்சயமாகத் தூண்டியிருக்கும். இந்தப் பத்திரிகையில் இதைப்போன்ற ஆசிரியர் தலையங்கங்கள், கட்டுரைகள், பேச்சுக்கள் என்பன இடையறாது வெளிவந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் நெருங்கும் வேளையில்

# தேவாலயங்களில் குண்டுவெடிப்பு நன்கு திட்டமிட்ட அரசியல் சதியா?

## சீமான் கேள்வி



(சென்னை)

இலங்கையில் தேர்தல் நெருங்கும் வேளையில் தேவாலயங்களில் குண்டுவெடிப்பு திட்டமிட்ட அரசியல் சதியா? என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் இதுவரை இல்லாத அளவு தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. ஈஸ்டர் தினத்தன்று தேவாலயங்கள், ஹோட்டல்கள் என ஒரே நாளில் மொத்தம் 8 இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன.

நாடே பதற்றமான சூழ்நிலையில் உள்ளது. ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்கள் தற்காலிகமாக முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகள் இந்தத் தாக்குதலை கண்டித்துள்ளன.

தாக்குதல் தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது. அவர்களிடம் விசாரணையும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இலங்கையில் தேர்தல் நெருங்கும் வேளையில் தேவாலயங்களில் குண்டு வெடிப்பு திட்டமிட்ட அரசியல் சதியா? என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் தலைநகர் கொழும்பில் தேவாலயங்களிலும் தங்கும் விடுதிகளிலும் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 250 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்திருப்பது தாங்கொணாத் துயரத்தை தருகிறது.

உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் 450 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள் எனவும் வெளியாகியிருக்கிற செய்திகள் பெரும் கவலையைத் தருகின்றன.

ஈஸ்டர் திருநாளையொட்டி தேவாலயங்களுக்கு வழிபடச் சென்ற மக்கள் மீது திட்டமிட்டு இக்கோரத் தாக்குதல் நிகழ்த்தப் பட்டிருக்கிறது. 2 இலட்சம் தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்தின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் நீதிகேட்டு இன்றும் நாம் போராடிக் கொண்டிருக்கிற வேளையில், இத்தாக்குதலானது பெரும் ஐயத்தை தோற்றுவிக்கிறது.

அண்மைக்காலமாக மசூதிகள் மீதும், தேவாலயங்கள் மீதும் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கிற நிலையில் இந்தத் தாக்குதல் பெரும் சந்தேகத்தைக் கிளப்புகிறது. இந்திய உளவு அமைப்பு இலங்கை அரசுக்கு 4 நாட்களுக்கு முன்பே எச்சரிக்கை கொடுத்துவிட்ட பிறகும் இலங்கை அரசு மெத்தனமாக இருந்ததன் மர்மம் என்ன?

இலங்கையில் தேர்தல் நெருங்குகிற வேளையில், அதுவும் தமிழர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் நடத்தப்பட்டிருக்கிற தாக்குதல் சிங்கள அரசு மீதே ஐயத்தை தோற்றுவிக்கிறது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்துச் சிங்கள மக்களிடையே அரசியல் செய்திட்ட சிங்களப் பேரினவாத அரசு இப்பயங்கரவாதத் தாக்குதலுக்கு என்ன காரணம் கற்பிக்கப்போகிறது?

தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலையை ஆதரித்த உலக நாடுகள் இந்தத் தாக்குதலுக்கு என்ன பதில் தரப் போகின்றன? போர்க்கருவிகள் உள்ளிட்ட எல்லா உதவிகளையும் தந்து பௌத்த சிங்கள அரசு தமிழர்களைக் கொன்றழித்த போது துணை நின்ற இந்திய அரசு, மத ரீதியிலான தாக்குதலுக்கு என்ன செய்யப் போகிறது?

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற சிங்கள அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைக்குப் பிறகு மிகவும் பாதிப்பிலிருந்த ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை இத்தாக்குதல் மேலும் கேள்விக் குறியாகியிருக்கிறது. இந்தச் சதிச் செயலுக்குப் பின்புலத்தில் இருப்பவர்கள் எவராயினும் அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

முதற்கட்ட விசாரணையே இன்னும் தொடங்கப்படாத நிலையில் தாக்குதலுக்கு, இஸ்லாமியர்கள் மீது பழிபோடும் வடஇந்திய ஊடகங்களின் செயல்கள் வன்மையான கண்டனத்திற்குரியது.

இது உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கச் செய்யும் மடைமாற்றச் செயலாகும்.

ஆகவே, சரியான விசாரணையையும் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய இழப்பீடுகளையும் தகுந்த மருத்துவச் சிகிச்சையும் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் சீமான் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## மின் கம்பத்துடன் கார் மோதி விபத்து



நீர்கொழும்பு - குளியாப்பிட்டிய வீதியின் கொட்டறமுல்ல பகுதியில் காரொன்று மின்கம் பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதுடன், கார் வேகக் கட்டுப்பாட்டையிழந்தமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் உயிர்ச் சேதம் எதுவும் இடம்பெறவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மேல் மாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவு

மேல் மாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்துள்ளது. இதுவரை 7 மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் இந்த மாகாண சபையின் ஆட்சிக் காலமும் நிறைவடைந்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய, வடக்கு, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றின் பதவிக்காலம் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. மேலும் இந்த அனைத்து மாகாணங்களும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இதே வேளை ஊவா மாகாண சபையின் பதவிக் காலம், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடையவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1701


### சிலம்பு

சொந்த ஊரில் வாழ்வது மட்டுமே வாழ்க்கை... மற்றதெல்லாம் வெறும் பிழைப்பு



### சரவணா

இந்த உலகத்தில் மிக மோசமான விடயம் நம் அன்பைப் பற்றி ஒரு நிமிடம் கூட நினைக்காதவர்களை நாம் நொடிக்கு நொடி நினைத்துக் கொண்டிருக்கிறதுதான்



### சிவாகினி

குரங்கில் இருந்து வந்திருப்பான் என்ற நம்பிக்கை இல்லை... அநேகமாக குரங்கு இனத்தில் இருந்து அடித்துத் துரத்தப்பட்டு வந்திருப்பான் மனிதன்



### தமிழ்

வாழ்க்கையில் நிம்மதி தேவையென்றால் ஞாபகமறதி நிச்சயம் தேவை!



### நிருத்திகன்

பேசவே கூடாது என முடிவு எடுத்த பின்பும் வலிகள் மறந்து, கோபங்கள் மறந்து பேச வைப்பதுதான் உண்மையான அன்பு



### நிவிதன்

நிறைய காயங்களுக்குப் பிறகுதான் கனவுகள் எல்லாம் நினைவாகும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண க.பொ.த. (சா/த) பரீட்சை அடைவு மட்டம் 2015 இல் இருந்து வளர்ச்சிப் போக்கில்

| | கல்வி வலயம் | 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | க.பொ.த. உயர்தரத் திற்கு தகுதி | | 9 ஏ சித்தி பெற்றவர்கள் | | சகல பாடத் திலும் சித்தி பெறாதவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண் | வீதம் | எண் | வீதம் | எண் | வீதம் |
| 01 | வெலஸ்முல்ல | 2578 | 2309 | 89.57 | 77 | 2.99 | 11 | 0.43 |
| 02 | கண்டி | 7605 | 6444 | 84.76 | 644 | 8.47 | 84 | 1.10 |
| 03 | மாத்தறை | 5493 | 4619 | 84.09 | 384 | 6.99 | 46 | 0.84 |
| 04 | குருநாகல் | 5950 | 4903 | 82.40 | 378 | 6.35 | 82 | 1.38 |
| 05 | ஜெயவர்த்தனபுர | 7620 | 6257 | 82.11 | 333 | 4.37 | 91 | 1.19 |
| 06 | கொழும்பு | 14513 | 11900 | 82.00 | 1736 | 11.96 | 285 | 1.96 |
| 07 | முலதியன-ஹக்மன | 2199 | 1803 | 81.99 | 18 | 0.82 | 19 | 0.86 |
| 08 | அக்கரைப்பற்று | 1259 | 1027 | 81.57 | 22 | 1.75 | 06 | 0.48 |
| 09 | நிக்கவரெட்டிய | 2961 | 2414 | 81.53 | 31 | 1.05 | 32 | 1.08 |
| 10 | குளியாபிட்டிய | 4113 | 3349 | 81.42 | 153 | 3.72 | 48 | 1.17 |
| 11 | காலி | 7245 | 5830 | 80.47 | 500 | 6.90 | 90 | 1.24 |
| 12 | மொரவக்க(தெனியாய) | 2270 | 1820 | 80.18 | 37 | 1.63 | 18 | 0.79 |
| 13 | கேகாலை | 4503 | 3601 | 79.97 | 141 | 3.13 | 68 | 1.51 |
| 14 | கல்முனை | 2386 | 1899 | 79.59 | 69 | 2.89 | 26 | 1.09 |
| 15 | மாவனெல்ல | 3865 | 3064 | 79.28 | 83 | 2.15 | 59 | 1.53 |
| 16 | தங்காலை | 2553 | 2015 | 78.93 | 39 | 1.53 | 39 | 1.53 |
| 17 | பதுளை | 2769 | 2177 | 78.62 | 96 | 3.47 | 33 | 1.19 |
| 18 | அம்பலாங்கொடை | 3349 | 2629 | 78.50 | 144 | 4.30 | 61 | 1.82 |
| 19 | அக்குரஸ்ஸ | 2076 | 1629 | 78.47 | 21 | 1.01 | 20 | 0.96 |
| 20 | கம்பஹா | 8227 | 6405 | 77.85 | 604 | 7.34 | 162 | 1.97 |
| 21 | மத்துகம | 3350 | 2594 | 77.43 | 124 | 3.70 | 50 | 1.49 |
| 22 | மாத்தளை | 3975 | 3072 | 77.28 | 191 | 4.81 | 63 | 1.58 |
| 23 | யாழ்ப்பாணம் | 3089 | 2387 | 77.27 | 110 | 3.56 | 68 | 2.20 |
| 24 | பிலியந்தலை | 5836 | 4497 | 77.06 | 206 | 3.53 | 105 | 1.80 |
| 25 | எல்பிட்டிய | 3160 | 2433 | 76.99 | 35 | 1.11 | 37 | 1.17 |
| 26 | பலாங்கொடை | 2723 | 2093 | 76.96 | 21 | 0.77 | 43 | 1.58 |
| 27 | அம்பாந்தோட்டை | 3998 | 3070 | 76.79 | 50 | 1.25 | 43 | 1.08 |
| 28 | இரத்தினபுரி | 6294 | 4833 | 76.79 | 238 | 3.78 | 117 | 1.86 |
| 29 | உடுகம | 1808 | 1382 | 76.44 | 15 | 0.83 | 25 | 1.38 |
| 30 | பண்டாரவளை | 3338 | 2548 | 76.33 | 110 | 3.30 | 65 | 1.95 |
| 31 | அநுராதபுரம் | 4825 | 3678 | 76.23 | 156 | 3.23 | 101 | 2.09 |
| 32 | கிரியுல்ல | 3923 | 2984 | 76.06 | 66 | 1.68 | 81 | 2.06 |
| 33 | மன்னார் | 1256 | 955 | 76.04 | 15 | 1.19 | 06 | 0.48 |
| 34 | வெலிமடை | 2725 | 2068 | 75.89 | 15 | 0.55 | 36 | 1.32 |
| 35 | சிலாபம் | 5635 | 4273 | 75.83 | 164 | 2.91 | 59 | 1.05 |
| 36 | மாகோ | 3813 | 2881 | 75.56 | 19 | 0.50 | 75 | 1.97 |
| 37 | ஹோமாகம | 4717 | 3559 | 75.45 | 114 | 2.42 | 128 | 2,71 |
| 38 | வடமராட்சி | 1415 | 1067 | 75.41 | 50 | 3.53 | 22 | 1.55 |
| 39 | இப்பாகமுவ | 3111 | 2342 | 75.28 | 44 | 1.41 | 73 | 2.35 |
| 40 | களனி | 7435 | 5582 | 75.08 | 181 | 2.43 | 145 | 1.95 |
| 41 | எம்பிலிப்பிட்டிய | 3839 | 2879 | 74.99 | 46 | 1.20 | 102 | 2.66 |
| 42 | அம்பாறை | 2524 | 1889 | 74.84 | 27 | 1.07 | 57 | 2.26 |
| 43 | கலன்பிந்துனோவெவ | 1672 | 1238 | 74.04 | 02 | 0.12 | 27 | 1.61 |
| 44 | வவுனியா | 2010 | 1488 | 74.03 | 51 | 2.54 | 27 | 1.34 |
| 45 | பொலநறுவை | 1920 | 1421 | 74.01 | 31 | 1.61 | 43 | 2.24 |
| 46 | களுத்துறை | 8506 | 6289 | 73.94 | 296 | 3.48 | 192 | 2.26 |
| 47 | வியலுவ | 896 | 656 | 73.21 | 03 | 0.33 | 22 | 2.46 |
| 48 | ஹொரணை | 5154 | 3767 | 73.09 | 227 | 4.40 | 98 | 1.90 |
| 49 | தேஹுவர | 2276 | 1653 | 72.63 | 14 | 0.62 | 42 | 1.85 |
| 50 | கட்டுகஸ்கோட்டை | 3183 | 2300 | 72.26 | 14 | 0.44 | 67 | 2.10 |
| 51 | மடு | 360 | 260 | 72.22 | 00 | 0.00 | 02 | 0.56 |
| 52 | பிபிலி | 1639 | 1183 | 72.18 | 16 | 0.98 | 52 | 3.17 |
| 53 | ஹெக்கிராவ | 2614 | 1877 | 71.81 | 39 | 1.49 | 75 | 2.87 |
| 54 | நிவித்திகல | 2370 | 1699 | 71.69 | 20 | 0.84 | 46 | 1.94 |
| 55 | மட்டக்களப்பு | 2323 | 1659 | 71.42 | 78 | 3.36 | 35. | 1.51 |
| 56 | தெஹியட்டகண்டிய | 1009 | 720 | 71.36 | 03 | 0.30 | 30 | 2.97 |
| 57 | மட்டக்களப்பு மத்தி | 1955 | 1391 | 71.15 | 58 | 2.97 | 59 | 3.02 |
| 58 | மினுவாங்கொடை | 5367 | 3316 | 71.10 | 72 | 1.34 | 124 | 2.31 |
| 59 | கெப்பிற்றிகொலாவ | 1966 | 1396 | 71.01 | 10 | 0.51 | 41 | 2.09 |
| 60 | திம்புலாகல | 1477 | 1043 | 70.76 | 02 | 0.14 | 33 | 2.24 |
| 61 | நீர்கொழும்பு | 7346 | 5192 | 70.68 | 211 | 2.87 | 215 | 2.93 |
| 62 | தெஹியோவிட்ட | 3700 | 2615 | 70.68 | 26 | 0.70 | 123 | 3.32 |
| 63 | ஹிங்குராங்கொடை | 2470 | 1743 | 70.57 | 24 | 0.97 | 73 | 2.96 |
| 64 | தெல்தெனிய | 1873 | 1321 | 70.53 | 07 | 0.37 | 49 | 2.62 |
| 65 | தம்புத்தேகம | 2444 | 1717 | 70.20 | 13 | 0.53 | 102 | 4.17 |
| 66 | கொத்மலை | 1461 | 1025 | 70.16 | 21 | 1.44 | 33 | 2.26 |
| 67 | திருக்கோவில் | 860 | 602 | 70.00 | 05 | 0.58 | 12 | 1.40 |
| 68 | மொனராகலை | 2198 | 1534 | 69.79 | 16 | 0.73 | 73 | 3.32 |
| 69 | நவுலா | 522 | 363 | 69.54 | 00 | 0.00 | 13 | 2.49 |
| 70 | ஹங்குராங்கெத்த | 1767 | 1227 | 69.44 | 34 | 1.92 | 59 | 3.34 |
| 71 | மூதூர் | 1286 | 887 | 68.97 | 06 | 0.47 | 24 | 1.87 |
| 72 | வத்தேகம | 2834 | 1954 | 68.95 | 14 | 0.49 | 76 | 2.68 |
| 73 | பசறை | 1081 | 745 | 68.92 | 07 | 0.65 | 19 | 1.76 |
| 74 | ஹற்றன் | 3117 | 2145 | 68.82 | 39 | 1.25 | 64 | 2.05 |
| 75 | வவுனியா வடக்கு | 548 | 377 | 68.80 | 00 | 0.00 | 08 | 1.46 |
| 76 | தென்மராட்சி | 884 | 605 | 68.44 | 16 | 1.81 | 40 | 4.52 |
| 77 | புத்தளம் | 5058 | 3453 | 68.27 | 47 | 0.93 | 91 | 1.80 |
| 78 | மகா ஓயா | 606 | 413 | 68.15 | 00 | 0.00 | 22 | 3.63 |
| 79 | திருகோணமலை | 1723 | 1174 | 68.14 | 40 | 2.32 | 57 | 3.31 |
| 80 | தனமல்வெல | 1301 | 880 | 67.64 | 13 | 1.00 | 39 | 3.00 |
| 81 | வில்கமுவ | 533 | 359 | 67.35 | 00 | 0.00 | 24 | 4.50 |
| 82 | கல்பொல | 3643 | 2453 | 67.33 | 48 | 1.32 | 97 | 2.66 |
| 83 | பட்டிருப்பு | 1439 | 967 | 67.20 | 23 | 1.60 | 26 | 1.81 |
| 84 | வெல்லவாய | 1762 | 1179 | 66.91 | 09 | 0.51 | 62 | 3.52 |
| 85 | முல்லைத்தீவு | 1255 | 838 | 66.77 | 20 | 1.59 | 29 | 2.31 |
| 86 | வலிகாமம் | 2493 | 1664 | 66.75 | 33 | 1.32 | 82 | 3.29 |
| 87 | கந்தளாய் | 975 | 646 | 66.26 | 12 | 1.23 | 29 | 2.97 |
| 88 | கலேவெல | 2223 | 1467 | 65.99 | 13 | 0.58 | 73 | 3.28 |
| 89 | கல்குடா | 1331 | 870 | 65.36 | 09 | 0.68 | 08 | 0.60 |
| 90 | வலப்பனை | 1482 | 959 | 64.71 | 12 | 0.81 | 55 | 3.71 |
| 91 | மட்டக்களப்பு மேற்கு | 1047 | 677 | 64.66 | 02 | 0.19 | 10 | 0.96 |
| 92 | மகியங்கனை | 1969 | 1271 | 64.55 | 16 | 0.81 | 75 | 3.81 |
| 93 | சம்மாந்துறை | 1377 | 887 | 64.42 | 16 | 1.16 | 45 | 3.27 |
| 94 | நுவரெலியா | 3131 | 1936 | 61.83 | 19 | 0.61 | 68 | 3.03 |
| 95 | தீவுகள் | 614 | 373 | 60.75 | 02 | 0.33 | 28 | 4.56 |
| 96 | கிளிநொச்சி | 2157 | 1302 | 60.36 | 27 | 1.25 | 84 | 3.89 |
| 97 | துணுக்காய் | 578 | 344 | 59.52 | 02 | 0.35 | 29 | 5.02 |
| 98 | கெண்ணியா | 1332 | 779 | 58.48 | 13 | 0.98 | [illegible] | [illegible] |
| 99 | திருகோணமலை வடக்கு | 590 | 320 | 54.29 | 03 | 0.51 | 45 | 7.63 |
| | தீவுகள் முழுவதும் | 296029 | 222281 | 75.09 | 3.13 | 3.13 | 5917 | 2.00 |

அட்டவணை V இல் தேசிய ரீதியாக வலய மட்டத்தில் க.பொ.த (சா/த) பரீட்சை அடைவு மட்டங்கள் தரப்பட்டுள்ளன. மேலும் தேசியப் பெறுபேறுகளின் அடிப்படையில் வலயங்கள் இறங்கு நிலையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை V

க.பொ.த.(சா/த) பரீட்சை-2018 வலய ரீதியாகப் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் (முதல்முறை) அடைவு மட்டம்

இலங்கையிலுள்ள 99 வலயங்களில் வடமாகாணம் அடைவு மட்டத்தில் 3 இடத்தைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாணம் 23 ஆவது இடத்தையும் மன்னார் 33 ஆவது இடத்தையும் வடமராட்சி 38 ஆவது இடத்தையும் வவுனியா 44 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. இந்த மூன்று வலயங்களும் கூடியளவு மாணவர்களைக் கொண்டிருப்பதனால் இவைகளின் அடைவுகளால் வடமாகாணம் குறிப்பிடத்தக்க நன்மையைப் பெற்றுள்ளது.

பின்னைய 49 இடங்களில் மடு 51 ஆவது இடத்தையும் வவுனியா வடக்கு 75 ஆவது இடத்தையும் தென்மராட்சி 76 ஆவது இடத்தையும் முல்லைத்தீவு 85 ஆவது இடத்தையும் வலிகாமம் 86 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. தீவுகள் 95 ஆவது இடத்தையும் கிளிநொச்சி 96 ஆவது இடத்தையும் துணுக்காய் 97 ஆவது இடத்தையும் பெற்றிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. கிளிநொச்சி வலயம் 2157 பரீட்சார்த்திகளைக் கொண்ட பெரிய வலயமாக இருந்த பொழுதும் குறைந்த பெறுபேற்றினால் மாகாணத்தின் அடைவு மட்டத்தை பெரிதும் பாதித்துள்ளது.

வடமாகாணத்தின் வலய மட்டப் பெறுபேறுகளை நோக்கின் யாழ்ப்பாணம் (77.27%), மன்னார் (76.04%) வலயங்களின் பெறுபேறுகளின் வீதம் தேசிய சராசரி வீதத்திலும் (75.03%) உயர்வாக இருக்கின்றன. யாழ்ப்பாண வலயத்தில் கோப்பாய் கோட்டத்தை நீக்கி நல்லூர், யாழ்ப்பாணம் இரண்டையும் இணைத்துப் பார்க்குமிடத்து அடைவுவீதம் அண்ணளவாக 85 வீதத்திற்கு மேல் இருக்கின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வவுனியா (74.33), மடு (72. 22%), வலயங்களின் சாதனைகள் பாராட்டிற்குரியன. வவுனியா வடக்கு (68.80%) உயர்வு போற்றத்தக்கது.

தென்மராட்சி (68.44%), முல்லைத்தீவு (66.77%), வலிகாமம் (66.75%) ஆகிய வலயங்கள் கூடுதலான பெறுபேற்றைப் பெற்றிருக்க வேண்டும். தென்மராட்சி, வலிகாமம் வலயமும் சிறந்த பாடசாலைகளை கொண்டும் நெருக்கமான மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் நகராக்கம் பெற்ற பகுதிகளாக இருப்பதனால் இவ்வலயங்களின் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வாக இருந்திருக்கவேண்டும். மேலும் இவ்வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை மிகவும் குறைவு.

இந்நிலையில் ஏன் இவ் இரண்டு குடாநாட்டு வலயங்களும் குறைவான அடைவு மட்டத்தைப் பெற்றிருக்கின்றன என்று தெரியவில்லை.

தீவுகள் (60.75%), கிளிநொச்சி (60.36%), துணுக்காய் (59.52%) வலயங்களின் பெறுபேறுகள் சராசரி 60 வீதமாகவுள்ளன.இம்மூன்று வலயங்களும் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டும் மீள்குடியேற்றங்கள் முற்றுப் பெறாத நிலையிலும் காணப்படுகின்றன. மேலும் உள்ளூர் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதும் பரீட்சை அடைவுக் குறைவுக்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம்.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற குறித்த பாடங்களின் ஆசிரியர்கள் பற்றாக்குறையும் மேலும் தினசரி வந்து போகும் ஆசி ரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளால் அவர்களின் கற்பித்தல் செயற்பாடு தொடர்ச்சியாகவும் உயர்வாகவும் இருக்குமா என்பது கேள்விக் குறியாகும்.

வடமாகாணத்தில் மொத்தமாக 326 பரீட்சார்த்திகள் ஏ சித்தி பெற்றிருக்கிறார்கள். நாட்டில் மொத்தமாக 9261 பரீட்சார்த்திகள் ஏ சித்தி பெற்றிருக்கிறார்கள். வட மாகாணத்தில் ஏ சித்தி பெற்றவர்களின் வீதம் 3.30 ஆகும்.

வடமாகாணத்திலிருந்து 16659 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதன் தேசிய வீதம் 5.62 ஆகும். வடமாகாண மாணவர்க ளின் மொத்த எண்ணிக்கை தேசிய விகிதாசாரத்துடன் வடமாகாணத்தில் ஏ சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கையும் விகிதமும் குறைவாக உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாண வலயத்தில் 110 பரீட்சார்த்திகள் 9 ஏ சித்தி பெற்றுள்ளார்கள். இத் தொகையில் வேம்படி உயர்தரப் பாடசாலையில் இருந்து 50 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர். மேலும் இப்பாடசாலையில் இருந்து பரீட்சை க்குத் தோற்றிய சகல மாணவிகளும் க.பொ.த (உ/த) கற்க தகுதி பெற்றுள்ளனர் என்பதுடன் மிக மிக உயர்வான வீதம் கணிதம், விஞ்ஞானப் பிரிவுகளுக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் 9ஏ சித்தி பெற்றோர் 37 ஆகவும் வவுனியா வலயத்தில் 9ஏ சித்தி பெற்றோர் 51 ஆகும். மேலும் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளிலும் ஏ சித்தி பெற்றோர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கது. இதில் வவுனியா இறம் பைக்குளம் தமிழ் மகளிர் வித்தியாலய மாணவிகள் 22 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

மேலும் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் 16 பேர் 9ஏ சித்தி பெற்றுள்ளனர். மேலும் இவ்வலயத்தில் 9ஏ சித்தி பெற்றதில் பல பாடசாலைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மன்னார் வலயம் பரீட்சை அடைவு மட்டத்தில் முன்னிலை வகித்த பொழுதும் 15 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர். மன்னார் சித்தி விநாயகர் இந்து வித்தியாலயம், சென்சேவியர் ஆண்கள், பெண்கள் பாடசாலைகள் ஏ சித்தி பெறுபேற்றில் முக்கிய இடம் வகித்துள்ளன. மடு, வவுனியா வடக்கு வல யங்களில் இருந்து எவரும் 9ஏ சித்தி பெறவில்லை. வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்கன. தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெறுபேறு சிறப்பாக அமைந்துள்ளது.

வலிகாம வலயத்தில் மகாஜனா கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரிகளின் பெறுபேறுகள் ஓரளவு சிறப்பாக அமைந்துள்ளன. முல்லைத்தீவு வலயத்தில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி, விசுவமடு மகா வித்தியாலயம் நல்ல பெறுபேறுகளைத் தந்துள்ளன.

கிளிநொச்சி வலயத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சென். தெரேசா, பளை மகா வித்தியாலயம் குறிப்பிடத்தக்கன. வவுனியா வடக்கில் நெடுங்கேணி மகா வித்தியாலயம், புளியங்குளம் மகா வித்தியாலய பெறுபேறுகளும் நம்பிக்கை தருவனவாக இருக்கின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## புத்தி பலம்



புத்தூர் என்ற ஊரில் இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமையே இல்லாதவன். ஆள் பார்ப்பதற்கு சுமாரான உடல் கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்ய முடியாது. ஆனால், பிறரது பலத்தை தனக்குப் பயன்படுத்தி காரியம் சாதித்துக் கொள்வதில் அவனை மிஞ்ச யாராலும் முடியாது.

இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களும் இளங்கோவை போல் உடல் வலிமையற்றவர்கள் என்று நினைத்து விடக்கூடாது. அவர்கள் மிகவும் பலசாலி.

"தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பலப்படுத்தி என்ன பிரயோசனம்? மூளையை பலப்படுத்துங்கள். அது தான் வாழ்க்கைக்கு உதவும்!" என்று சொல்லிச் சிரிப்பான்.

அதற்கு அந்த மூவரும், "இளங்கோ! உடலை பலப்படுத்தினால் போதும், மூளை தானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும். ஹூம்... நோஞ்சான் பயலான உனக்கு உடலைப் பற்றி என்ன தெரியும்!" என்று சொல்லி சிரிப்பர்.

இப்படியாக அவர்கள் நல்ல நண்பர்களாகவே இருந்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்குத் தேவையான பொருட்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேட்டின் மேல் ஏற்றி விடலாம் என்று நினைத்த அவன், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா? என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது, எதிர்த்திசையில் இருந்து அவனது மூன்று பலசாலி நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

"விடுவிடு"வென்று கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான்.

அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

"எனதருமை நண்பர்களே! உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி!" என்றான் இளங்கோ.

"என்ன போட்டி நோஞ்சான்?" என்று கேட்டனர்.

"உங்களுக்கும், எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!" என்றான் இளங்கோ.

அதைக் கேட்டு அந்த மூன்று பலசாலி நண்பர்களும் "ஹா... ஹா... ஹா...!" என்று பலமான சிரிப்புச் சிரித்தனர்.

"நோஞ்சான் பயலான உனக்கும், பலசாலிகளான எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத்தான் அவமானம். போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்!" என்றனர் அவர்கள்.

"இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள். நீங்களோ போலி. பலசாலிகள் போல வேஷம் போடுகிறீர்கள்!" என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.

"சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழு தான். நீ எங்கோ பறந்து சென்று மண்ணைக் கவ்வப் போகிறாய்!" என்று சொல்லிவிட்டு கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

இளங்கோ மேடு ஏறிப் போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிறை இறுக்கமாகப் பிடித்தான்.

"ம்! இழுக்கலாம்!" என்று கத்தினான்.

அந்த மூன்று நண்பர்களும் இளங்கோதான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர். அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று "இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ" என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது.

மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப் போனால் அது எத்தனை அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலம் கொண்ட மட்டும் கயிறை இழுத்தனர்.

எதிர்ப்பக்கமிருந்த இளங்கோ, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான்.

வண்டி இப்பொழுது மெல்ல மேட்டில் ஏறத் தொடங்கியது.

இளங்கோ தான் மெல்ல பலத்தை இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. "இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம்' என்று நினைத்தவாறே மீண்டும் கயிறை வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ.

அவர்களுக்கு அப்பொழுது தான் விடயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று.

மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ, "மூளை பலம் என்பது இது தான்," என்று சொல்லி நமுட்டு சிரிப்பு சிரித்துவிட்டு, தனது வண்டியை சமதளத்தில் மிகவும் இலாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.

## விடுகதைகள்

- உடல்சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

**அஞ்சல் பெட்டி**

- கூரை வீட்டைப் பிரிச்சா..ஓட்டுவீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை!வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம்! அது என்ன?

**தேங்காய்**

- நீண்ட உடலிருக்கும் தூணும் அல்ல, உடலில் சட்டை இருக்கும் ஆனால் உயிர் இல்லை, துயிலில் சுகம் இருக்கும் மெத்தை அல்ல அது என்ன?

**தலையணை**

- தலை போனால் மறைக்கும் இடை போனால் குரைக்கும் கால் போனால் குதிக்கும் மூன்றும் ஒன்று சேர்ந்தால் முந்தி ஓட்டம் பிடிக்கும். அது என்ன?

**குதிரை**

## சிரி... சிரி...

**அப்பா:** ஏன்டா உஜாலா போத்தல கீழ போட்டு தாண்டிகிட்டு இருக்குற?

**மகன்:** எங்க ஸ்கூல்'ல நாளைக்கு நீளம் தாண்டுற போட்டி இருக்கு. அதுக்கு தான் பிராக்டீஸ் பண்ணி கிட்டு இருக்கேன்.

இன்பத்திலும் சிரிங்க!
துன்பத்திலும் சிரிங்க!
எல்லா நேரமும் சிரிங்க!
அப்பத்தான் நீங்க லூசுன்னு எல்லாரும் நம்புவாங்க.

## பொது அறிவு துணுக்குகள்

- நத்தை ஒரு மைல் (1.6 கிலோமீற்றர்) தூரம் செல்வதற்கு, சுமார் 17 நாட்கள் வரை ஆகும்.
- ஆக்வா ரெஜியா என்ற திரவத்தில் கரைத்தால், தங்கம் கரைந்து விடும்.
- மாலைதீவில் விளைகிற லொடாய்சியா என்ற இரட்டைப் பனங்கொட்டை தான், உலகிலேயே மிகப்பெரிய விதையாகும்.
- நம்முடைய தலைமுடியில் இருந்து அமினோ அமிலம் தயாரிக்கப்படுகிறது. இது மருந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரிப்பில் உதவுகிறது.
- ஒருவரின் பிறப்பிலேயே அமையும் இரத்த வகை, அவருடைய ஆயுள் முழுவதும் மாறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே அநீதியைக் கண்டாலும் உன் மனம் தாங்க முடியாமல் துடித்தெழுகிறதா?
*அப்படியானால் நீயும் என் நண்பன்தான்!*
– சே குவேரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டின் அனைத்து மக்களும் ஒற்றுமைப்பட வேண்டிய நேரம்

நாட்டில் நடந்த குண்டுவெடிப்பு பயங்கரத்தால் மக்கள் பதைபதைத்துப் போயுள்ளனர்.

எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயப்பீதி மக்களை வாட்டுகிறது.

ஏன்தான் இப்படி என்ற கேள்விகளைக் கடந்து, தேவாலயங்கள் மீதும் நட்சத்திர விடுதி உள்ளிட்ட வேறு இடங்களிலும் சமநேரத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னணி என்ன என்பதை நிறுதிட்டமாகக் கண்டறிய வேண்டிய தேவை மிகவும் முக்கியமானது.

ஊகங்களின் அடிப்படையிலும் வதந்திகளின் மூலமாகவும் குற்றச்சாட்டுக்கள் மேலெழுமாக இருந்தால், உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய முடியாமல் போகும்.

எனவே இவ்விடத்தில் மிகவும் நிதானமாகச் செயற்படுவது இந்த நாட்டு மக்களினதும் ஊடகங்கள் மற்றும் சமூகவலைத்தளங்களினதும் தார்மீகக் கடமையாக இருக்கும்.

தவிர, தேவாலயங்கள் உட்பட பல இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்கும் உள்நாட்டு சக்திகளுக்கும் அல்லது உள்நாட்டு அரசியலுக்கும் தொடர்பு உண்டா? என்ற அடிப்படையிலும் வெளிநாட்டுப் பயங்கரவாதத்தின் பின்னணியாக இத்தாக்குதல் நடைபெற்றதா என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற வேண்டும்மாயினும் உண்மையான குற்றவாளிகளை, குண்டுவெடிப்பின் பின்னணியை கண்டறியத் தவறும் ஒவ்வொரு கணப்பொழுதும் மக்களின் அன்றாட வாழ்வு என்பது பேராபத்து நிறைந்ததாகவே இருக்கும்.

எனவே இது விடயத்தில் இலங்கைத் திருநாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு மேற்போந்த பயங்கரமான சூழலை இல்லாதொழிக்கத் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தனித்து இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றில்லாமல், இலங்கை என்பது இந்த நாட்டில் வாழுகின்ற அத்தனை மக்களினதும் தேசம் என்ற உணர்வை ஏற்படுத்தத் தவறியதன் விளைவை இப்போதேனும் சிங்கள ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

எந்த இடத்திலும் மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டிருப்பது கட்டாயம் என்பதை அனைவரும் உணரட்டும்.

இவற்றுக்கு மேலாக, இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மக்களும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்களுக்கிடையிலான ஒற்றுமையை பாதுகாக்க வேண்டும்.

யாரோ ஒரு குழு அல்லது அமைப்பு செய்ததை ஓர் இனத்தின் மீதோ அன்றி ஏதுமறியாத அப்பாவி மக்கள் மீதோ குற்றமாக வைக்கின்ற பாதகத்தை யாரும் செய்துவிடாதீர்கள்.

மிகவும் நிதானமாகவும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் நாம் செயற்படுவோமாக இருந்தால் குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகள் அன்னியப்படுவர்.

ஆகையால் ஒற்றுமையைப் பேணுவதுதான் அனைத்து மக்களினதும் கடமையாக இருக்க வேண்டும்.

இங்கு அனைத்து மக்களினதும் ஒற்றுமைக்கான சூழலை உருவாக்குவது அரசின் கடமையாகும்.

# சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய தென்பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள்

## மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் கைது

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய தென் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை தாழ்வுபாடு கிராம மக்கள் நேற்று திங்கட்கிழமை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களும் முச்சக்கர வண்டியில் தாழ்வுபாடு கிராமத்திற்குள் பயணித்துள்ளதோடு, தாழ்வுபாடு தேவாலய பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியுள்ளனர்.

இதன்போது குறித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களிடம் நீங்கள் யார்? எதற்காக இங்கே வந்தீர்கள்? என கேட்டதற்கு முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கதைத்துள்ளனர்.

உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையினை பரிசோதித்தபோது அவர்கள் 25 மற்றும் 35 வயது மதிக்கத்தக்க கொழும்பு மற்றும் நிட்டம்புவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

கிராம மக்கள் ஒன்று கூடியதை அவதானித்த அப்பகுதி பொலிஸார் விரைந்து செயற்பட்டு குறித்த இரு சந்தேக நபர்களையும் கைது செய்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதோடு, அவர்கள் பயணித்த முச்சக்கர வண்டியையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் மக்கள் அச்சத்துடனும் விழிப்புணர்வுடனும் காணப்பட்ட நிலையிலேயே குறித்த சந்தேகத்திற்கு இடமான இரு நபர்களும் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-286)

## காத்தான்குடியில் சுற்றிவளைப்பு 7 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடியல் நேற்று முன்தினம் திடீர் சுற்றி வளைப்பின் போது ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த விசேட புலனாய்வுக் குழுவொன்றே அதிரடிப்படையினருடன் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டது.

ஷங்கிரிலா ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபரின் மனைவியின் சகோதரரே கைது செய் யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் இந்த கொடூர தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-3)

## குண்டுதாரிகள் தங்கிய அறையில் கொத்துரொட்டியும் குர்ஆனும் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஷங்ரிலா ஹோட்டலில் குண்டை வெடிக்க வைத்த தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கியிருந்த அறையில் இருந்து கொத்துரொட்டி பார்சல் மற்றும் அல் குர்ஆன் நூல் என்பனவற்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பை அடுத்து தீவிர விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார், செய்தியாளர்கள் சிலரை ஷங்ரிலா ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர்.

616ஆம் இலக்க அறையில் தங்கியிருந்த இரண்டு சந்தேகநபர்கள் சி4 ரக குண்டை எடுத்துக் கொண்டு மூன்றாம் மாடியில் உள்ள உணவகத்தில் ஒருவர் வெடிக்கச் செய்துள்ளார் என்றும், மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடும்போது மற்றவர் லிப்டுக்கருகில் குண்டை வெடிக்கச் செய்ததாகவும் சிசிரிவி ஆதாரத்தை வைத்து செய்தியாளர்களிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருந்த அறையில் கொத்துரொட்டி பார்சல் ஒன்று இருந்துள்ளது. அல் குர்ஆன் புனித நூல் ஒன்றும் இருந்துள்ளது. இவர்கள் வெளிநாட்டு பிரஜைகளா? என்று பொலிஸ குழு விபரங்களை சேகரித்து வருகிறது. (ம-3)

## கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

நீதிமன்றப் பிடியாணை உத்தரவின் பேரில் கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

குறித்த பிரதேச உறுப்பினர் மீது பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குக்காக ஆஜராகுமாறு நீதிமன்ற அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில் நீதிமன்றப் பிடியாணை உத்தரவின் பேரில் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டாா. (ம-3,10,60)

## பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் இன்று தீர்மானம்

### கல்வி அமைச்சர் அகில விராஜ்

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இன்றைய தினம் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நேற்று தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பாடசாலைகள் மீண்டும் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சரிடம கேட்டபோதே, நாளைய தினம் (இன்று) நிலைமைகளை கவனத்தில் கொண்டு பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அரசாங்க பாடசாலைகள் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக நேற்று ஆரம்பிக்கப்பட இருந்தன. நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிப்பு சம்பவங்களை அடுத்து பாடசாலைகளுக்கு விடுமுறை தினமாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-3)

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

குண்டு வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகளுக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் அதேவேளை காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டுமே உலகமும் சிறப்புடையதாக இருக்கும்.
- ❖ அறியாமையுடன் வாழ்வதைக் காட்டிலும், போரில் ஈடுபடும் வீரனைப் போல போராடி மாய்வதே மேலானது.
- ❖ உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றுங்கள். நேர்மையின் பாதையில் செல்லுங்கள். கோழையாகவும், வேடதாரியாகவும் இருக்காதீர்கள்.
- ❖ கொடுக்கும் சக்தி உங்களிடம் உள்ள வரையில் கொடுங்கள். அது ஆயிரம் மடங்காகப் பெருகி உங்களிடமே மீண்டும் வரும்.
- ❖ எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். உங்களுக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- ❖ தன்னை அடக்கிப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்பட மாட்டான். அத்தகையவனே உலகில் நன்றாக வாழத் தகுதிபடைத்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டுகால அமைதியின் பின் வெடித்த புயல்
# சங்கக்கார-ஜெயவர்த்தன டுவிட்டரில் இரங்கல்

நாட்டில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள் தனது இதயத்தை நொறுக்கியுள்ளதாக முன்னாள் கிரிக்கெட் வீரர் சங்கக்காரவும், இலங்கைக்கு இது மிகவும் சோகமான நாள் என்று ஜெயவர்த்தனவும் தங்களது டுவிட்டர் பக்கங்களில் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நேற்று முன்தினம் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் சர்வதேச அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. பிரபலங்களும், பல நாடுகளின் தலைவர்களும் இந்த சம்பவங்களுக்கு கண்டனங்களையும், வருத்தங்களையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜெயவர்த்தன ஆகியோர் குண்டுவெடிப்பு குறித்து டுவிட் செய்துள்ளனர்.

சங்கக்கார தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், 'இந்த இழிவான காட்டுமிராண்டி செயல்களினால் நான் அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்துள்ளேன். பாதிக்கப்பட்டவர்களுக்காக எனது இதயம் நொறுங்கிவிட்டது.

நீங்கள் அனைவரும் என் எண்ணங்களிலும் பிரார்த்தனைகளிலும் உள்ளீர்கள். என் அன்பினை நான் நீட்டிக்க விரும்புகிறேன்' என தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஜெயவர்த் தன கூறுகையில்,

'இலங்கையில் இருக்கும் நம் அனைவருக்கும் இது மிகவும் சோகமான நாள். 10 ஆண்டுகால அமைதிக்கு பிறகு மீண்டும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களை காணகிறோம்.



கண்டனங்கள் மற்றும் பிரார்த்தனைகளை இழந்தவர்களுக்காக செய்யும் இந்த நேரத்தில், நாம் அமைதியுடனும், ஒற்றுமையுட னும் இருக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார். (க)



# வீணானது டோனியின் விஸ்வரூபம்
# கோலி படைக்கு மூன்றாவது வெற்றி

சென்னை அணிக்கெதிரான போட்டியில் பெங்களூரு அணி ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கோலி தலைமையிலான பெங்களூரு அணியும், டோனி தலைமையிலான சென்னை அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணிக்கு தொடக்க வீரர் பார்த்தீவ் பட்டேலை தவிர மற்ற வீரர்கள் சொதப்ப, இறுதியாக அந்தணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்கள் எடுத்தது.

பெங்களூர் அணி சார்பில் அதிகபட்சமாக பார்த்தீவ் பட்டேல் 37 பந்துகளில் 53 ஓட்டங்களும் மோயின் அலி 16 பந்துகளில் 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

அதன் பின் 162 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணிக்கு தொடக்க வீரரான ஷேன் வொட்சன் 5, ரெய்னா டக் அவுட், டூப்பிளிசிஸ் 5 என வந்த வேகத்தில் திரும்ப, டோனி தனி ஒருவனாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார்.





ஒரு கட்டத்தில் சென்னை அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 26 ஓட்டங்கள் தேவை என்பதால், சென்னை அணி தோற்றுவிடும் என்று நினைத்த போது, டோனி தன்னுடைய விஸ்வரூப ஆட்டத்தை காட்ட அந்த ஓவரில் மட்டும் 24 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.

இதில் முதல் பந்தில் பவுண்டரி, அடுத்த இரண்டு பந்தில் சிக்ஸர் நான்காவது பந்தில் பவுண்டரி, ஐந்தாவது பந்தில் 2 ஓட்டம் என்று எடுத்தால, கடைசி பந்தில் இரண்டு ஓட்டங்கள் தேவைப்பட்டது.

ஆனால் கடைசி பந்தை உமேஷ் யாதவ் வேகத்தை குறைத்து வீசியதால், பந்தானது டோனியை ஏமாற்றி கீப்பரிடம் செல்ல, பட்டேல் அற்புதமாக பிடித்து ரன் அவுட் செய்தார்.

இதனால் இந்த போட்டியின் கடைசி பந்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது. தனியொருவராக அணியின் வெற்றிக்காக போராடிய டோனி கடைசி வரை ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்கள் பெற்றிருந்தார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பில்
# மயிரிழையில் உயிர்தப்பிய கிரிக்கெட் வீரர்





கொழும்பில் நடந்த வெடி குண்டு தாக்குதலில் இருந்து இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவர் உயிர் தப்பியதுடன், இன்னொரு இலங்கை வீரரின் தாயாரும் உயிர் பிழைத்துள்ளார்.

8 இடங்களில் நடந்த குண்டு வெடிப்பில் அதிகமானோர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயம் அடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் வீரர் தஷூன்சனகவின் தாய் தேவாலயத்தில் நடந்த குண்டுவெடிப்பில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

அதே போல வளர்ந்து வரும் இலங்கை வீரரான ஹசிதா பொயகோட, ஷங்ரி லா ஹொட்டலில் நடந்த குண்டு வெடிப்பில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன. (க)

# இலங்கைக்காகப் பிரார்த்தியுங்கள்
# உயிரிழந்தோருக்கு விராட் அஞ்சலி



இலங்கையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவ செய்தி தனக்கு அதிர்ச்சியளிப்பதாக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி கூறியுள்ளார்.

கொழும்பில் ஆறு இடங்களில் நடந்த குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி தனது டுவிட்டர் பக் கத்தில், இலங்கையில் இருந்து வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. இதில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் என்னுடைய பிரார்த்தனைகள், இலங்கைக்காக பிரார்த்தனை செய்யுங்கள் என பதிவிட்டுள்ளார். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை எதிர்பார்த்து நாம் தயார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு குண்டு வெடிப்பில்

# பிரபல கோடீஸ்வரரின் மூன்று பிள்ளைகளும் உயிரிழப்பு



(கொழும்பு)

ஆஸஸ் (Asos.com) என்ற நிறுவனத்தின் தலைவரான பிரபல டென்மார்க் கோடீஸ்வரர் அன்டெர்ஸ் ஹோல்ச் போவ்ல் செனின் மூன்று பிள்ளைகள் இலங்கை குண்டுவெடிப்பில் உயிரிழந்துள்ளனர்.

இணைய வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கும் ஹோல்ச் போவ்ல் செனுக்கு நான்கு குழந்தைகள். இந்நிலையில், இலங்கையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் அவரது மூன்று பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர்.

தமது பிள்ளைகளின் உடல்களை ஏற்க இவர்கள் இலங்கை வருவார்களா என்ற தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

46 வயதான ஹோல்ச் போவ்ல் சென் ஸ்கொட்லாந்தின் முக்கிய நிலப்பகுதிகளுக்கு சொந்தக்காரர் ஆவார்.

அவரும் அவரது மனைவியும் சுமார் 200,000 ஏக்கர் மலைப்பாங்கான பிரதேசத்திற்கு உரிமையாளர்கள் ஆவர். எதிர்கால சந்ததிக்காக இவர்கள் இந்த நிலத்தை வளமானதாக்க முயற்சிகளை மேற்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்களில் 291பேர் உயிரிழந்ததோடு சுமார் 500 பேர் வரை காயமடைந்தார்கள்.

உயிரிழந்தவர்களில் 8 பேர் பிரித்தானிய பிரஜைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

### யாழ்ப்பாணத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில்

# மர்ம நபர்களின் நடமாட்டம்; பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன.

இத் தாக்குதல்கள் மேலும் பல இடங்களில் நடத்தப்பட இருந்ததாக தகவல்கள் வெளியாகி வருகின்றது.

இதன்படி கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ். உரும்பிராய் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றிலும் மர்ம நபர் ஒருவர் நடமாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தேவாலயத்திற்கு வருகை தந்திருந்த குறித்த நபர், வியாபாரி என்று தன்னை அறிமுகம் செய்திருந்ததுடன் வயோதிபப் பெண் ஒருவரிடம் தேவாலயத்தில் ஆராதனைகள் ஆரம்பிக்கும் நேரம், ஆராதனையில் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை கேட்டு அறிந்துள்ளார். முன்னர் அறிமுகமில்லாத நபராக இருந்த போதிலும் குறித்த பெண் இதனை பெரிது படுத்தவில்லை.

ஆனால் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களின் பின்னர் இது தொடர்பாக தேவாலய பங்குத் தந்தையிடம் குறித்த பெண்மணி முறையிட்டுள்ளார்.

இதனை அடுத்து பொலிஸாருக்கு பங்குத் தந்தை தகவல் தெரிவித்துள்ள நிலையில் தேவாலயத்திற்கு விரைந்துள்ள கோப்பாய் பொலிஸார் தேடுதல்களை மேற்கொள்வதுடன் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை குறித்த தேவாலயத்திலும் சூத்திரதாரிகள் குண்டுத்தாக்குதலை மேற்கொள்ள முனைந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் இணுவில் பகுதியில் முக்காடு அணிந்து பெண்ணொருவர் ஆலயத்திற்குள் நுழைய முயன்ற சம்பவம் தொடர்பாக பிரதேச இளைஞர்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அடுத்தடுத்து யாழ்ப்பாணம், இணுவிலிலுள்ள இரண்டு ஆலயங்களிற்குள் அந்த யுவதி நுழைய முயன்றது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூரில் நடமாடும் சந்தேகத்திற்கிடமானவர்கள், அறிமுகமற்றவர்கள் பற்றிய தகவலை தமக்கு உடனே வழங்கும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அதே போல, தேவையற்ற வதந்திகளை உருவாக்காமல், சந்தேகங்களை பொலிஸாரிடம் உடனடியாக தெரியப்படுத்தும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-10)

# 160 தீவிரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவல்?

## இந்திய ஊடகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்குள் 160 தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மற்றும் குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் ஏற்கெனவே இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தியதாக இந்திய வெளியுறவு அமைச்சை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்றுக்கு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் மற்றும் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்காக வெளிநாடுகளிலிருந்து 160 தீவிரவாதக் குழுவினர் இலங்கைக்குள் உள் நுழைந்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

### தற்கொலைக் குண்டுதாரி கைது செய்யப்பட்டு

# அரசியல் அழுத்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டவர் - கபிர் ஹாசீம்




(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய ஒரு குண்டுதாரி ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என அமைச்சர் கபீர் ஹாசீம் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஈஸ்டர் ஞாயிறன்று கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு உள்ளிட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் சுமார் 295 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மாவனெல்ல பகுதியில் பௌத்த சிலைகள் மீது தாக்குதல் நடத்திய இயக்கமொன்றைச் சேர்ந்த நபர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அதன் போது உயர் அரசியல் தரப்பின் அழுத்தங்கள் காரணமாக விடுதலை செய்யப்பட்ட ஒருவரும் தற்கொலைதாரியாக தாக்குதலில் பங்கேற்றிருந்தார் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசியல் அழுத்தங்கள் காரணமாக குறித்த தற்கொலைக் குண்டுதாரி விடுவிக்கப்பட்டார் என்பது பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அதனை விசாரணை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (ம-3)

### ஷாங்ரிலா நட்சத்திர ஹோட்டலில்

# தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தியவர் இன்ஸான் சீலவன்

## நீதிமன்றில் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

ஷாங்ரிலா நட்சத்திர ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர் இன்ஸான் சீலவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர், அவிஸ்ஸாவெல்ல - வெல்லம்பிட்டிய பகுதியில் உள்ள தொழிற்சாலையின் உரிமையாளர் எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரியப்படுத்தியுள்ளனர்.

**கொவிசெத**
திகதி 2019.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 2097
ஆங்கில எழுத்து Q — வெல்லப்பட்ட இலக்கங்கள் 46 58 65 75
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2019/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 3901
ஆங்கில எழுத்து P — வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 9 1 0 6 5
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 2019/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 370
வெற்றி எழுத்து R — சுப்பர் இலக்க 21 — வெற்றி இலக்கங்கள் 10 49 59 72

**கொவிசெத**
திகதி 2019/04/21
சீட்டிழுப்பு இலக்கம் 2096
ஆங்கில எழுத்து F — வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 17 58 74
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2019/04/21
சீட்டிழுப்பு இலக்கம் 3900
ஆங்கில எழுத்து R — வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 1 6 0 7 3
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**
திகதி 2019/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 1420
இலக்கம் 07 — வெற்றி இலக்கம் 18 27 46 68 — 26 54
தேசிய லொத்தர் சபை



கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9 பேரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் பொலிஸார் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் அவர்களை மே மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்கேயின்...

குறித்த படகினை வழிமறித்து சோதனையிட்ட போது போதைப்பொருளை கடத்தி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மாதகல், பண்டத்தரிப்பு பகுதிகளைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் எத்தனை கிலோ போதைப்பொருள் மீட்கப்பட்டது என்பது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்படவில்லை. (ம-3-10)

## அமெரிக்கா, அவு...

கொழும்புக்கு வந்து விசாரணைகளுக்கு உதவி வருகின்றனர் என்று பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவ்பிஐ அதிகாரிகள் நேற்று வந்துள்ளனர். அவர்கள் எமக்கு உதவிக்கொண்டிருக்கிறார்கள். அனைத்துலக பொலிஸ் நிபுணர்கள் இன்று வரவுள்ளனர்.

அவுஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகள் குழுவும் விசாரணைக்கு உதவுவதற்காக கொழும்பு வர்வுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கொழும்பு கொச்சி...

படையினர் சோதனையிட முற்பட்ட போது மக்களை அவ்விடத்தில் இருந்து அகற்றியுள்ளனர். பின்னர் அப்பகுதியில் இருந்து சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்த சந்தர்ப்பத்தில் மக்கள் ஒன்று திரண்டு அவரை தாக்க முற்பட்டுள்ளனர்.

இதையடுத்து, வானில், குண்டுகள் பொருத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அதையடுத்து, இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் குண்டை வெடிக்க வைத்தனர். வான் வெடித்துச் சிதறி தீப்பற்றி எரிந்தது.

குறித்த வானுக்குள், 4 சமையல் எரிவாயுச் சிலிண்டர்களை இணைத்துப் பொருத்தப்பட்டிருந்த இந்தக் குண்டு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்கும் பிரிவால் செயலிழக்கச் செய்யப்பட்டதாக, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீப் தெரிவித்துள்ளார்.

குறித்த குண்டில் நூல் ஒன்று கட்டப்பட்டு இருந்ததாகவும் அந்த நூலின் மறு நுனியில், ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் ஒன்று கட்டப்பட்டு இருந்ததாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நாணயத்தாளைக் காண்பவர்கள், அதனை எடுக்க முற்படும்போது, வெடிகுண்டு வெடிக்கும் வகையிலேயே சூட்சுமமான முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளதாகவும் எம்.ஆர்.லத்தீப் தெரிவித்துள்ளார்.

எனினும், குறித்த பிரதேசத்திலுள்ள மக்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் குண்டு தகர்க்கச் செய்யப்பட்டதாகவும் இதன் போது, பல வீடுகளின் கூரைகள், யன்னல்கள் சேதமடைந்துள்ளதுடன் கொழும்புத் துறைமுகத்தின் மதிலும் உடைந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## மூவரடங்கிய குழு...

வால் நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் எம்.கே.இலங்ககோன், முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமன்ன ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல்களின் பின்னணி, காரணி உள்ளிட்டவை தொடர்பில் ஆராய்ந்து 2 வாரங்களுக்குள் இந்த குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## அவசரகால சட்ட...

இந்தியா மற்றும் சிங்கப்பூருக்கு விடுமுறை கால தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

இந்த நிலையில் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் அவர் தலைமையில் நேற்று நண்பகல் இடம்பெற்றது. அதிலேயே அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதியின் அதிகாரத்தின்படி வரும் 30 நாள்களுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் தேவையான அதிகாரத்தை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய அமைப்புக்கள், அது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள் மற்றும் அதற்கு அனுசரணை வழங்கிய அனைத்து நாசகார சக்திகளையும் முழுமையாக அழிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் இலங்கையில் உள்ள சகல வெளிநாட்டு தூதுவர்களையும் உயர்ஸ்தானிகர்களையும் அழைத்து நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விளக்கமளிப்பதற்கும் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளதுடன் இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு அவர்கள் அனைவருடைய சர்வதேச ஒத்துழைப்பையும் கோரவுள்ளார்.

உள்நாட்டு பயங்கரவாதிகளின் இந்த தாக்குதல்களின் பின்னால் சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் இருப்பது குறித்து புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ள காரணத்தினால், அவற்றை ஒழிப்பதற்காகவே இவ்வாறு சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இதே நேரம் கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு தேவையான அனைத்து இடங்களுக்கும் முறையான பாதுகாப்பு திட்டமொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி பாதுகாப்பு துறையினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (ம-3)

## சிறப்பு அதிரடிப்...

பில் சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணம் அராலி வீதிக்கும், நாவந்துறை வீதிக்கும் இடையே பொலிஸ் தடை போடப்பட்டு சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் அம்பாறை சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு அமர்ந்துள்ளார்.

தான் முட்டை பல்ப் (மின்குமிழ்) முகவர் எனவும் அதனை யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பதற்கு இங்கு வந்துள்ளதாகவும் கூறி வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளார்.

எனினும் வாடகைக்கு குடியமர்ந்து சில மாதங்கள் ஆகிய போதும் அவர் மின்குமிழ் வியாபாரத்தில் ஈடுபடவில்லை என வீட்டு உரிமையாளரால் சந்தேகிக்கப்பட்டது. அத்துடன், அவரிடம் பல கார்களிலும் வாகனங்களிலும் புதுப் புது நபர்கள் வந்து செல்வதையும் வீட்டு உரிமையாளரும் அயலவர்களும் கண்டுள்ளனர்.

இதனால் நாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களையடுத்து அந்த இளைஞன் மீது சந்தேகம் கொண்டவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதனடிப்படையில் அங்கு விரைந்த சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். வீடு சுற்றிவளைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## ஆயிரம் ரூபாயை...

எடுக்க முற்படும்போது, வெடிகுண்டு வெடிக்கும் வகையிலேயே சூட்சுமமான பொறிமுறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், குறித்த பிரதேசத்திலுள்ள மக்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் குண்டு தகர்க்கச் செய்யப்பட்டதாகவும் இதன்போது, பல வீடுகளின் கூரைகள், யன்னல்கள் சேதமடைந்துள்ளதுடன் கொழும்புத் துறைமுகத்தின் மதிலும் உடைந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## குண்டுவெடிப்பு...

26 சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களில், சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர்கள் பலரும், தம்புள்ளையில் வைத்து நேற்று காலை கைது செய்யப்பட்ட இரு முக்கிய சந்தேக நபர்களும் இவர்களுள் அடங்குகின்றனர்.

தம்புள்ளையில் கைது செய்யப்பட்ட இருவரும், மாவனெல்லை பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் முக்கியமான சந்தேக நபர்கள் என பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இதனைவிட கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பில் 3 சந்தேக நபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், வெள்ளவத்தை பொலிஸார் கைதுசெய்த இருவர் அந்த பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஷங்ரில்லா ஹோட்டலில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மொஹம்மட் சஹ்ரானுடன் இணைந்து தற்கொலை தாக்குதல் நடத்திய இன்சான் சீலவன் என்பவரின் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஒன்பது பேரை வெல்லம்பிட்டிய பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு எதிர்வரும் மே 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தற்கொலை தாக்குதல் தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினர் முன்னெடுக்கும் சிறப்பு விசாரணைகளில் வெல்லம்பிட்டிய,, லன்சியாஹேன பகுதியில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதம்பை பகுதியில் வைத்து 5 சந்தேக நபர்களும், கம்பளை, கட்டுகஸ்தோட்டை பகுதிகளில் வைத்து 4 சந்தேக நபர்களும் கந்தானை பகுதியில் தொலைதொடர்பு உபகரணங்களுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வத்தளை, எந்தரமுல்ல பகுதியில் வீடொன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தங்கியிருந்த இருவரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை 8 இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் 7 சம்பவங்கள் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் என அரச இரசாயன பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது. (ம-3)

## தௌஹீத் ஜமாத்...

உள்நாட்டவர்கள் என்றும் கூறியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று நண்பகல் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தாக்குதல்கள் தொடர்பில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்களால் கடந்த 4ம் திகதியே முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தன. எனினும் தாக்குதல்களைத் தடுக்கத் தவறிய பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உடனடியாகப் பதவி விலகவேண்டும். அல்லது அவரைப் பதவி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவோம்.

பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு முப்படைத் தளபதிகள் சமுகமளிக்க மறுத்தனர். பாதுகாப்புச் சபை கடந்த டிசம்பர் மாதத்துக்கு பின்னர் கூடவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த சோதனை நடவடிக்கை

நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பலத்த சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கையை பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

சந்தேகத்துக்கிடமான பொதியொன்று குறித்த தகவல் கிடைத்ததையடுத்து புறக்கோட்டைப் பகுதியின் பல இடங்களிலும் நேற்று மாலை திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும், இருப்பினும், எதுவும் கிடைக்கப் பெறவில்லையெனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)


## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் எமது கணக்காளர் நிறுவனத்துக்கு வர்த்தகத்துறையில் A/L சித்தியடைந்த கணக்கியல் பயிலுநர் தேவை. HNDA Charterted மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். காரியாலய பியோனும் தேவை. தொடர்பு: 076 554 1472

## வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பெற்றோல் நிலையம் முன்பாக பலாலி வீதியை முகப்பாக கொண்ட 1,700 சதுர அடி பரப்பளவுடைய கட்டடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், வியாபாரம் செய்பவர்களுக்கு உகந்தது. 0779530496

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-6164)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## கணினி திருத்தம் LAPTOP PC REPAIR

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

சிசிரிவி கமரா 35000/= CCTV CAMERA

4 CCTV CAMERAS 2MP, 4 CHANNEL DVR 1, 500GB HARDDISK, 8 BNC CONNECTORS, POWER SUPPLY1 DC PINS 4, TT WIRES 50METER, FULL COPPER WIRES 50 METER. WITH INSTALLATION CHARGES } 35000/=

077908 6737 GUNA BEST PC 522, Manippay Road, Oddumadam Junction, Jaffna.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

(6553)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org